# பல மணிகள்









உ

# “பல மணிகள்”!!!

## பொருளடக்கம்

1. பல மணிகள் ---------- 1

2. சாதனையை விடுவதே சாதனை ---------- 51

3. விபத்து ஆபத்து ---------- 93

எல்லாம் நீ!



# "ஸ்ரீ ஸத்குரு திருவடி துணை"!

# "லௌகீகமும் & தெய்வீகமும்"!!!

1 கேள்வி:— பறவைகளுக்கும், மிருகங்களுக்கும் மனம் இல்லையென சொல்கிறீர்களே, அப்படியானால், மனம் அழிந்த (மறந்தான) நிலைதானே, ஜீவன் முக்தி? அப்படியானால், அவைகளும் அந்த நிலையிலேயே, ஜீவன் முக்தி பெற வாய்ப்பு உண்டா? இல்லையா?

பதில்:— அவஸ்யம் ஜீவன் முக்தி இல்லை!

கேள்வி:— காரணம் என்ன? அங்குதான் மனம் இல்லையே!

பதில்:— உண்மைதான். மனம் இல்லைதான்! ஆனால் வினை உண்டே! அவ்வினை அழிய வேண்டாமா?

கேள்வி:— அப்படியானால் பறவைகளும், மிருகங்களும், அந்த ஜன்மாவில் வினையை பெருக்க முடியாதே. மனம் இருந்தால்தானே வினைப்பெருக்கம் உண்டு.

பதில்:— உண்மைதான். மனம் இல்லாமல் வினைப்பெருக்கம் இல்லைதான். ஆனால் அச்ஜீவர்களின் பழவினையான, சஞ்சிதம் என்னும், பெரிய மூட்டை இருக்கிறதே அது அழியாத தன்மையினால், அச்ஜன்மாவில் ஏற்று வந்த கர்மாவை மட்டும் முடித்துக் கொண்டு, அடுத்த ஜன்மாவை சஞ்சிதவினையிடம் ஏற்றுக்கொண்டு, அடுத்த ஜன்மாவை எடுக்க வழி வகுத்துக் கொள்ளும்!



உ

கேள்வி:- அப்படியானால் அசீவர்க
ளுக்கு கதி மோக்ஷம் என்ன?
பதில்:- நீ சொல்லும் கதி என்பது,
உயர் பிறவியும், பதமுக்தியும், ஆகும்.
மோக்ஷம் என்பது பிறவா நிலை ஆகும்.
ஆனால் அசீவர்களுக்கு மனம் இல்லாத
தன்மையினால் அதாவது உண்மை இன்மையை பகுத்தறிய முடி
யாத தன்மையினால், ஓர் மனித பிறவியை எடுத்தால்தான்,
அவர்களுக்கு, அவர்கள் நிலைகண்டு, கதியோ மோக்ஷமோ?
அவஸ்யம் ஸாந்தியமாகும்!

கேள்வி:- அப்படியானால் மனித ஜன்மாவில் எத்தனையோ
பேர், பிறவிக்குருடாயும், பிறவிச் செவிடாயும், வாய் ஊமை
யாயும், மற்றும் செயல்பட முடியாத அங்க ஹீனர்களாயும்,
பிறந்துவிட்டால், உங்கள் நிலையில் சொல்லும், மனம்
செயலற்ற தன்மையினால், அவர்கள் மோக்ஷம் எய்த ஏதுவாகுமோ?

பதில்:- அங்கு மனம் செயல் அறுபடவில்லை. மனம் புதையுண்டு
கிடக்கிறது. கரும வினையால் (வியாதியால்) மனம் பாதிக்கப்பட்டு குமுறிக்
கொண்டிருக்கிறது. அங்கு அஹங்காரமும், அதிகாரமும்,
அமோஹமாக இருக்கும். மனம் செயலற்ற தன்மையென்றால்
அங்கங்கள் (கருவி கரணங்கள்) நலமாக இருக்கவேண்டும்.
அந்நிலையில், கண்பார்வை பொருளற்ற தன்மை ஆகவேண்டும்.
காது கேட்கும் நிலையில், விகாரமும் விவகாரமும் அடையாமல்
இறைபர உணர்வோடு இருக்கவேண்டும். வாய் பேசும் நிலையில்
இதமாகவும், மிதமாகவும், இறைவுணர்வோடும் பேசும் நிலை
யில் இருக்கவேண்டும். அதுவே மனம் மறந்தான நிலையாகும்.

கேள்வி:- அவர்கள் அடங்கித் தானே இருக்கிறார்கள்?
பதில்:- உண்மைதான். கரும் கர்மவினை வியாதியால் மனம் அடங்
கப்பட்டு இருக்கிறார்களேயன்றி, உண்மை இன்மையை மனம்
உணர்ந்து மனம் அழிய (மறந்தாக)வில்லை. ஆகவே மோக்ஷம்
இல்லைதான்.



உ

௪. கேள்வி:— ஸ்ரீபகவானுக்கும், இச்ஜீவர்களின் புண்ணிய பாப வினைக்கும், அதைச் சார்ந்த பிறவிக்கும், சம்பந்தம் உண்டா?

பதில்:— அவஸ்யம் சம்பந்தம் இல்லவே இல்லை!

கேள்வி:— ஏன் இல்லை? அவன்தானே உலகையும் ஜீவ உடல்களையும், அவைபுசிக்கும் பொருள்களையும், உண்டாக்கியவன். அப்படியிருக்க அவன் ஏன் பொறுப் பேற்க மாட்டான்?

பதில்:— உலகையும், ஜீவ உடல்களையும், அவைகள் புசிக்கப்படவல்ல பொருள்களையும், படைத்தவன் அவனே! ஆனால் மனதை அவன் உண்டாக்கவில்லை. ஆனால் இதை உணரவேண்டும்!

ஸ்ரீபகவானின் நிழல்மாயை! அது அவன் பிடியில் இருக்கிறது!

ஆனால்?

மாயையின் பிரதிபிம்பம் (மாயையின் குழந்தை) மனமாகும்!

இந்தமனம், ஜீவனைப் பற்றியிருக்கிறது! இந்தமனதின் இயக்கம், நான், என்னால், என்னுடையது, என்ற அஹங்கார, அதிகார, அபிமானங்களாகும். இவை மூன்றும்;

இம்மனதின் இருப்பும்; இம்மனதின் இயக்கமும்; இம்மனதின் (கர்மா) செயல்பாடும்; இம்மனதின் தோற்றமும்; முடிந்த முடிவாக ஜனன மரண கர்மாவின் பெருக்கமும்; கலிதோஷத்தின் மூலதனமும். மேலே கூறிய மூன்றே காரணகாரியமாக இருக்கிறது!

கேள்வி:— ஏன் ஸ்ரீபகவானே இம்மூன்றையும் விலக்கவோ, அழிக்கவோ வதை செய்யலாகாதா?

பதில்:— அவஸ்யம் செய்வான். அவனை முழுமையாக சார்ந்திரு!

அவனை சார்ந்திருப்பது என்றால், மேலே கூறிய மூன்றையும் முழுமையாக விட்ட நிலையில், எல்லாம் நீயே என்றும்; எல்லாம் உன்னால் என்றும்; எல்லாம் உன்னுடையதே என்றும்; ஸர்வசங்க பரித்தியாகமாக, எந்த கேள்வியும் கேளாமல் சரண்புகுவதே அவனை சார்ந்திருப்பதாகும்.

௨



௩. கேள்வி:— இச்ஜீவர்களின் மோஹம் எது?
பதில்:— மோஹம் என்பது நாமரூபமயக்கம்!
கேள்வி:— அந்த நாமரூபத்தால் விளைவது எது?
பதில்:— மனகற்பனைசொரூபமான நாமரூப பொருள்கள், மாறுவதாலும், மறைவதாலும், விட்டு விலகுவதாலும், அந்த ஏக்கத்திலே உண்டாகும், விசேஷம் என்ற கவக்கலே பயமும் உண்டாகும்.

கேள்வி:— இந்த மாறுவது, மறைவது, விட்டு விலகுவது, என்பது பொருளைக்குறிக்கிறதா? மனதைக்குறிக்கிறதா?

பதில்:— அனைத்து பொருள்களும் ஜடமே. (அறிவற்றதே). ஆனால் அவை புண்ணிய பாப வினைக்கேற்றபடி மனதால் ஒருவருக்கொருவர் வந்து சேர்வதும், கொடுப்பதும், வாங்குவதும், சென்றடைவதும், இயல்பாகவே எந்த முயற்சியும் இல்லாமல் ஸ்ரீபகவானின் மாயாகார்யத்தினால் ஒழுங்காக நடைபெறுகிறது! ஆனால் இந்த மாயா மனமே, அதில் உரிமை கொண்டாடுவதனாலும், எதிர் பார்ப்பதனாலும், ஓர் மாற்றத்திலே ஏமாற்றம் அடைவதால், அந்த குணதோஷங்கள் பின்னவிடுகின்றன! அதனால் வினைகள் பெருகின்றன! பொருள்கள் வருவதும் இல்லை, போவதும் இல்லை.

கேள்வி:— பொருளில், பற்று என்ற பிணைப்பு உண்டாவது, பொருளாலா? மனதாலா? எதை எப்படி விடுவது?

பதில்:— பொருளை வேண்டாம் என விடுவது துறவாகாது. அது வெறும் ஜடமே. அப்பொருள் வருவதோ, இருப்பதோ, விலகுவதோ, இல்லவே இல்லை. அப்பொருளை மேலே கூறிய படி, உடைமையாக்குவதும், உரிமைகொண்டாடுவதும், எதிர்பார்ப்பதும், மனதின் பிணைப்பாகும். ஆகவே பொருளை விடுவது துறவு ஆகாது. அப்பொருளின் பற்றை, மனதால் நாமும் அல்ல. நம்முடையதும் அல்ல என்று இறைவனிடம் சர்வார்ப்பணமாக விடுவதே துறவு ஆகும்!



உ

4. கேள்வி:- மோஹம் என்றால் என்ன? போகம் என்றால் என்ன? விளக்கமுடி...

பதில்:- மோஹம் என்றால், விலக்கமுடியாத ஆசை. அப்படியான கடின ஆசையின் வெறி, என சொல்லலாம். போகம் என்றால், அதை என்னுடையது என உரிமை கொண்டாடி, மனதால் தனதாக பாவனை செய்வது போகம் ஆகும்.

கேள்வி:- இவ்விரண்டையும் எப்படி விலக்குவது?

பதில்:- யதேச்சையாக கிடைப்பதிலும், தம்மிடம் இயல்பாக இருப்பதிலும், அப்போதைக்கப்போது இயல்பாக நடப்பதிலும், ஆத்திரம், அவசரம், வேகம் படபடப்பு, இல்லாமல் அமைதியாக, இது இறைவன் கருணையென ஏற்றுக்கொண்டால், மோஹமும், போகமும், அழியும். எதிர்பார்ப்பு இருந்தால், அவசியம் ஏமாற்றம் வந்தே தீரும். அந்த ஏமாற்றமும் ஓர் மாற்றத்தால் உண்டாவதாகும். ஒன்று மற்றொன்றாய் மாறுவது இயல்பே. அப்படி மாறும் போது, நாமரூப மாற்றத்தால், மனம் ஏமாற்றம் அடைகிறது. இங்கு அனைத்தும் இறைவன் செயலே என்றும் பொருளே என்றும், அனைத்தும் இறைவன் உறுதிநிச்சயமானால், மாற்றமும் இல்லை, ஏமாற்றமும் இல்லை.

ஓர் முக்கியம்.

5. பதில்:- முன் முதல் பக்கத்தில் மிருகங்களுக்கும், பறவைகளுக்கும், மீன் வகைகளுக்கும், மனம் இல்லையானாலும், பழவினை சந்தேகம் உண்டு என்றும், அதனால் ஜன்மா உண்டு என்றும், சொன்னது ஞாபகம் இருக்கலாம். அதில் ஓர் ரகசியம் அடங்கியிருக்கிறது. அதை எம் கண்ணன் (திருடன்) சொல்ல, இதை எழுதுகிறோம். கவனமுடன் கேட்பீர்களாக. முன்பே சொன்னோம், வர்ணம் (இனம்) நான்கு என்றும், அவை (மனித இனத்தைத் தவிர) நடப்பன, நீந்துவன, பறப்பன, ஊர்வன என்றும், கண்களுக்குத் தெரியாத, கிருமி கீடகம் எனவும் சொன்னோம்.



உ

இந்த நான்கு வர்ணத்தாரும், மனம் இல்லா
தன்மையினால், இவைகள் மறுபிறவிக்கு
பழவினையான, சஞ்சிதமே காரணமாக இருக்
கிறது. ஆனால் இவைகளுக்கும் கதி மோக்ஷம்
உண்டு.

கதி:- உயர்பிறவி & பரமுக்தியும்

மோக்ஷம்:- பிறவாநிலையும் அவஸ்யம்
பெறவாய்ப்புண்டு. எப்படி யென்றால்?

நற்கதி:- நல்லவர்கள் பாதம்பட்டால் நற்கதி உண்டு!!
என ஸ்ரீமஹான்கள் சொல்வார்கள். ஆனால் இந்த நான்கு
இனத்தாரும், புண்ணியம் பண்ணவும் முடியாது. புண்ணியம்
என்றால் எது எனவும் தெரி
தேடவும் முடியாது. புண்ணியம் என்பது உயர் குல பிறவியையும், உயர்
யாது/ ஆனால் இந்த புண்ணியம் ↑ வாழ்க்கையையும் கொடுக்கும். மேலே
வசதியான போக வாழ்க்கையையும் கொடுக்கும். மேலே
வசதியான போக வாழ்க்கை ஸ்பரிசமோ, அவர்கள்
கூறிய, உயர் பிறவி பெற்றவர்களின், ஸ்பரிசமோ, அவர்கள்
கூறிய, உயர் பிறவி பெற்றவர்களின் (உச்சிஷ்டமோ) கிடைத்தால், அவஸ்யம்,
ஆகாரமோ (உச்சிஷ்டமோ) கிடைத்தால், அவஸ்யம்,
உயர்பிறவியோ, உயர் வசதியான போக வாழ்க்கையோ
கிடைக்கும். அதில் மேலும் புண்ணியம் மேலிட்
அவஸ்யம் கிடைக்கும். அதில் மேலும் புண்ணியம் மேலிட்டால் தெய்வகிருபை (தெய்வ அனுக்ரஹம்) அவஸ்யம் பெறவாய்ப்பு
உண்டு. மேலும் இங்கு புண்ணியம் மேலிட மேலிட அதுவே
தர்மமாகவும் வழியுண்டு. அது தர்மமானால், ஸ்ரீமஹான்களின்
தர்ஸனமும், ஸ்பர்ஸனமும், நிலைகண்டு, வினைகண்டு
மனம் உணர்ந்திட்டிட, அதனால் ஜீவன்முக்தியும் பெறலாம்.

மோக்ஷம்:- மேலே கூறிய இந்த நான்கு வர்ணத்தா
ரும், பூர்வபுண்ணியம் அணுப்பிரமாணம் இருந்தாலும்,
ஏதோ தவறுதலினால், இந்த ஈன ஜன்மம் எடுத்திருந்தாலும்
ஸ்ரீமஹான்களின் கூர்ந்த திருஷ்டியோ, அவர்கள் கர
சரீர பாத ஸ்பரிசமோ, கிடைத்தால் அச்ஜீவர்கள் நிலைகண்டு
வினைகண்டு, மனம் உணர்ந்து, மனுஷ ஜன்மா கிடைத்து,
அதனால் தெய்வ அனுக்ரஹமும், ஸ்ரீ ஸத்குருகிருபையும் பெற்று,
ஜீவன்முக்தி (பிறவாநிலை) பெறவாய்ப்புண்டு என ஸ்ரீமஹான்
கள் சொல்லுவார்கள்.



இதில் ஓர் உண்மை என்னவென்றால், மனம் படைத்த இந்த மனித இனத்தைத் தவிர, மற்றும் நடப்பன, பறப்பன, நீந்துவன, ஊர்வன, மற்றும் புழு பூச்சிகளும், கண்ணுக்குத் தெரியாத கிருமி கீடகங்களுக்கும், மனம் இல்லாத தன்மையினால் (வினை இல்லை) "வினை" கூடாது; குறையாது. வந்த வினை முழுவதும், ஆதிவினையாகிய சஞ்சிதம் ஒன்றே, அழியாமல், அப்படியே இருக்கும். இந்த "உயிரினங்கள்" அனைத்தும், அந்த ஜீவ உடல் விட்டு பிரியும் போது "எந்த நாமரூப சம்பந்தத்தால்!" பிரிவு ஏற்படுகிறதோ. எந்த நிலையில் (அவ்வுடல்) நீக்கப்படுகிறதோ. அந்நிலையில் ஜன்மா உண்டு என, ஸ்ரீ மகான்கள் சொல்லுவார்கள். இதன் உண்மை:— இந்த ஜீவ கோடிகள் அனைத்துமே (தம் மரணத்தில்) "ஒன்றை ஒன்று உண்ணும்" (ஒன்றைக் கொன்று உணவு). இந்த ஜீவ கோடிகளுக்கு மரணம் இயற்கையாக இல்லவே இல்லை! மனிதனின் காலமும், மனமும் பட்டால், மரணம் இயற்கையாக உண்டு! "விபத்தில்!" மரணம் உண்டாகலாம். அல்லது ஒன்றைக்கொன்று ஆகாரம் ஆகலாம். ஆனாலும் அவைகளுக்கு அடுத்த பிறவிக்கு வித்து (வினை) சஞ்சிதமே! வேறு வினை தொடராது. இதுமாபெரும் உண்மை.



உ

மனிதனின் சாபமும், மனமும் பட்டால்,
மரணம் இயற்கையாக உண்டு :- எந்த
ஓர் ஜீவகோடிகளின் ஜீவனும், மனிதனால்,
வளர்க்கப்பட்டு, கைபட்டு, மனம் கொண்டு,
மரணம் சம்பவிக்குமாயின், அதுவே அவைகளுக்கு
இயற்கை மரணமென்று பேசுவதாக, ஸ்ரீமஹான்கள்
தம் அனுபவத்தால் சொல்லுவார்கள். அதன் காரணமாவது?

"மணம்" படைத்த இம்மனிதனின் பார்வையும், கரமும்,
மனமும், அச்சீவன் மீது படும் போது, "மணம்" இல்லாத
அச்ஜீவர்களுக்கு சாப விமோசனம் ஆகிறதென சொல்வதுண்டு.

இதன் மற்றொரு ரகஸ்யம் என்னவென்றால்?

அந்த ஜீவனின் வினையை, மனம் படைத்த மனிதன், தானே
"வலிய" ஏற்றுக் கொள்கிறான். அவ்வினையை அந்த ஜன்மா
விலோ, அடுத்த ஜன்மாவிலோ அனுபவித்தே ஆகவேண்டும். ஆகவே
வீடுகளில் எந்த ஜீவர்களையும், செல்வப்பிராணி என்றே,

அதற்கு நாம் காவல் என்றும், நமக்கு அது காவல் என்றும்
வளர்ப்பது, வினைகளை நாமே ஏற்கிறோம் எனப்பொருள் கொள்க.
ஆனால் இல்லங்களில் "பசு" மட்டும் வளர்க்கலாம்.

எருமையோ, காளையோ, ஆடோ, நாயோ, பூனையோ, கோழி, கிளி,
மைனா எனப்பறவைகளையோ வளர்க்கலாகாது. பசு மட்டும் ஏன்
வளர்க்கலாம் என்றால், பசு ஒன்றே "காமதேனு"
என்ற தெய்வ இனம் ஆகிவிடுகிறது! அதன் பாலும் புனிதமானது.
அபிஷேக ஆராதனை என்ற தெய்வ பூஜைக்கு உகந்ததாகிறது!



மனுஷ்ய ஜன்மா இல்லாமல் முக்தியில்லை!

கேள்வி:— அன்று எழுதியவன், அழித்து எழுதப் போவதில்லை! என்ற ஓர் பழமொழி நிலவி வருகிறதே, அது எப்படி, எதனால், முக்கியம் பெறுகிறது? இங்கு நம் இறைவன், அப்படி ஒவ்வொருவர் தலையிலும் எழுதி விடுகிறானா? அதை அழிக்க அவனால் முடியாதா? இது ஓர் உபசாரவாசகமாகும்.

பதில்:— நல்ல கேள்விதான். இறைவன் ஒருவன் உண்டு. ஆனால் அவன் நம் போன்று இல்லை. எப்படியென்றால், அவனிடம் விருப்பு வெறுப்பு இல்லை! அவனிடம் பாரபட்ச நோக்கம் இல்லை! 84 லட்சம் ஜீவகோடிகளும் முதலில், அவன் குழந்தைகள் என்றே சொல்ல வேண்டும். பின் அனுபவத்தால், அவனும் நாமும் ஒன்றே என்றுதான், பிரமாணமாகச் சொல்ல வேண்டும். இச்ஜீவர்கள் தமக்குத்தாமே, விதியென்ற ஒட்டை (தலைவிதியை) எழுதிக்கொள்கிறார்கள், என்றே சொல்ல வேண்டும். ஆனால் பிரமாணமான உண்மை என்னவென்றால்? விதியும் இல்லை! விதிக்கும் இறைவனும் இல்லை! அப்படி ஓர் எழுத்தும் இல்லை! ~~இவனே இறைவனாக இருப்பதால்,~~ இவன் விதியை இவனே எழுதிக்கொள்கிறான். வினை விதைத்தவன் வினை அறுப்பான், தினை (உணவு) விதைத்தவன் தினை அறுப்பான் என்றும்; முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் என்றும்; கேடுவரும் பின்னே, மதி கெட்டுவரும் முன்னே என்றும்; கொடுத்ததை வாங்க வேண்டும், அதுபோல், வாங்கியதை கொடுக்க வேணுமென்றும்; நீ கொன்றன அனைத்தும் அனைத்தும் உன்னை கொல்கின்றன என்றும்; நீ தின்றன அனைத்தும் அனைத்தும் உன்னை தின்கின்றன என்றும்; மண் ஆசைப் பட்டேனே (பட்டேன்) (அதனால்) (என்னை) மண் உண்டு போட்டதடா என்றும்; ஆதாவது? நீ எதை செய்தாயோ படுகிறாய் என்றும்; எதைப் பேசுகிறாயோ அதை செய்விக்கப் அல்லது இனி வரும் வினைக்கு இப்போதே செய்வதற்கும், பேசுவதற்கும்.



உ

வித்திடுகிறாய் என்றும், பொருள் கொள்ள
வேண்டும்! இவைகள் நான், என்னால்,
என்னுடையது என்ற, ஆகாமிய வினையால்,
விளைகிறது என்றும் உணர வேண்டும்.
ஒன்று முன் வினையாகவாம். அல்லது இனி
நீ அனுபவிக்க வேண்டி, நீயாக வித்திடுகிறாய்,
என்றும் பொருள் கொள்ளல் வேண்டும்!
மேலும் உன்னுடைய பிராரப்த வினையானது, உன்னை
அசூத்தாமமும் ஆஷ்த்தாமமும் தான், இறைவன் கருணையி
னால் நடைபெறுகிறது. ஆனால் மனம் வசம் ஆன உன்னால்,
அதிக கடினமாகவும், அதிகபாரமாகவும், கலக்கம் பயம்
கொண்ட உபாதையாகவும், இருக்கக் காரணம், உன்னுடைய
நான், என்னால், என்னுடையது என்ற, அஹங்காரமும், அதி
காரமும், அபிமானமுமே, காரணமாகிறது என்று உணர்.
பாரத்தையும், பளுவையும், கஷ்டம், கவலை, பயம், இவை
களையும், நீயே மேலே சொன்ன மூன்று நிலைகளில், விடாப்
பிடியாக, பலவந்தமாக, வலிய பற்றிக் கொள்கிறாய், என்று
மட்டும் பிரமாணமாகச் சொல்லுவோம். இதன் காரணம்
மனம் வசப்பட்ட தன்மையினால் தான் நீ மனிதன் ஆனாய்!
அதே மனதை, உன் வசம் ஆக்கி, நீ அந்த (மனதை) ஆண்டாயானால்
நீ மனிதன் அல்ல, நீயே தெய்வம் ஆவாய். மனதை நீ ஆளுவது என்பது
மேலே சொன்ன மூன்றையும் விட்ட நிலையில், எல்லாம் நீயே
என்றும், எல்லாம் உன்னால் என்றும், எல்லாம் உன்னுடையதே
என்று மாற்றிப் பிடித்தால், மனதின் ஆகாமிய வினைக்கோ,
பிராரப்த அனுபவ அழுத்த பாரமான, கஷ்டம், கவலை, பயம்,
இவைகளுக்கோ, இடம் இல்லாமல் போய் விடும். இவ்வுல
கம் உன்னுடையதே. இவ்வுலகம் உன் தேவைக்காக,
(விளையாட்டிற்காக) உண்டாக்கப்பட்டதே! ஆகவே



உ

எம் இறைவன் விதியை எழுதவும் இல்லை.
அது உன் தலையெழுத்தும் இல்லை. அதை
மாற்ற முடியாது என்பதும், இல்லவே இல்லை.

இதை கவனி!

1. நீ இறைவன் குழந்தையானால் இறைவனால்
உண்டாக்கப்பட்ட இவ்வுலகம் உன்னுடையது தானே?

2. இவ்வுலகை அனுபவிப்பதில் ஏன் உடைமை கொண்டாட
வேண்டும்? ஏன் உரிமை கொண்டாட வேண்டும்? ஏன்
அஹங்காரமும் அதிகாரமும் அபிமானமும் கொள்ள
வேண்டும்? விளையாட்டை ஏன் வினையுமாக்க (வினையாக)
வேண்டும்? உன்னால் இவைகளை (உடைமையோ பொருள்களையோ) கொண்டு வரவோ
கொண்டு செல்லவோ முடியுமா? (அவசியம் முடியாது)

3. உன் அனுபவத்தில் நீ வளர்ந்து பெரியவனானால், நீ
உன் தந்தையாகிய இறைவன் தானே? நீயே இறைவன்
ஆனால் விருப்பு வெறுப்பு உனக்கு எப்படி தோன்றும்?

4. நீயே இறைவன் ஆகும் போது, உன் மாயையின் நிழல்
(மகன்) ஆகிய மனம் எப்படி உன்னிடம் விளையாடும்?
மனதின் வினையின் விளையாட்டே, மேலே சொன்ன மூன்றுமே
உன் திருஷ்டியின் மாற்றத்தினால், நீ எப்படி ஏமாற முடியும்?

5. இவ்வுலக விளையாட்டில் வினையும், விபரீதமும், கொ
ண்டு பிடிப்பால் தானே, வினை பெருகுகிறது? இவை அனைத்
தும், பழக்க வழக்க தோஷம் தானே. என ஏன் உன்னால், (உணர)
முடியவில்லை? நான், என்னால், என்னுடையது, என்பது இது
காலபரியந்தம், நீயாக ஏற்ற பழக்க வழக்கம் தானே?
அதை நீயாகவே மாற்றி, எல்லாம் நீயே, எல்லாம் உன்னால்,
எல்லாம் உன்னுடையதே என, மாற்றிப் பழகிப் பாரேன்?
அதில் எத்தனை சுகம் உண்டு தெரியுமா? அச்சுகத்தை அனுப்
பிரமாணம், நீ அனுபவித்துவிட்டால் இவ்வுலக இனிமை
கனவாக மறைந்து விடுமே? முயற்சி உன்னுடையது, பலன் எம்முடையது.



உ

7. கேள்வி:— நம்பினோர் கெடுவதில்லை! என்பது ஸ்ரீமஹான்களின் வாக்காகவும் தெரிகிறது. லௌகிகம் தெய்வீகம் இவ்விரண்டிற்குமே பொருந்துவதாகவும் தெரிகிறது. நம்பிக்கை என்றால் என்ன? அது எப்படி எதன் மேல் வைப்பது? அதன் ஆரம்பம் என்ன? அதன் முடிவு என்ன? முடிந்த முடிவின் அனுபவம் என்ன?

பதில்:— நம்பிக்கையென்றால் அது உன் கைகளாகும்! கை இல்லாத மனிதன் இருந்தும் வீணே! அது போல வைராக்கியம் என்பது, உன் கால்களாகும்! உன் வைராக்கியமாகிய, கால்களால் தான், காலத்தை கடந்து, காலாதீத நிலையை பெறவேண்டும்! இந்த நம்பிக்கையென்ற கைகள் இல்லையானால், இல்லற (லௌகிக) தர்மத்தையும், கடைப்பிடிக்க முடியாது. இந்த வைராக்கியம் என்ற, கால்கள் இல்லையானால், இவ்வுலகின் இன்மை உண்மைகளை உணர்ந்து, தாண்டி நடந்து கடந்து செல்லவும் முடியாது! அதேபோல் நம்பிக்கை இல்லையானால், (மனம் என்ற உறுதியான கையில்லையானால்) சூட்சும ரூப இறைவனுக்கு ஓர் நாமாவையும் ரூபத்தையும், கொடுத்து, நீயே கதியெனப் பற்றவும் முடியாது. அதே போல், வைராக்கியம் என்ற கால்கள் இல்லையானால், உலகமும் உடலும், உறவும், அனைத்துப் பொருள்களும், பொய்யென மெய்யாகவே உணர்ந்து, அதை தாண்டிச் செல்லவும் முடியாது! மனிதனாக பிறந்த ஒருவனுக்கு, (குழந்தைக்கு) அதன் அன்னை அவளையும் தெரியும். அவள் அன்பை (அமுதை) முதலில் தருகிறாள். அக்குழந்தையும், இவள் தான் நம் அன்னையென, முழுமையாக நம்பிக்கை கொள்கிறது. அந்த அன்னை, அதன் தந்தையை சுட்டிக் காட்டி, இது தான் உன் தந்தையென உணர்த்துகிறாள். அன்னையின் வாக்குக்குக் கட்டுப்பட்டு, அக்குழந்தை, அன்னை சுட்டிக்காட்டியவனை, தந்தையென முழுமையாக நம்புகிறது. இப்படி இல்லற தர்ம நிலையால், அக்குழந்தை நம்பிக்கையால் இல்லற தர்மத்தை கடைப்பிடிக்கிறான்.



## ௨

இவ்வுலகில் நம்பிக்கையுடன் பிரவேசிக்கும் அக்குழந்தை, தந்தையின் மூலம் அறிவைப் பெறுகிறான். அந்த அறிவே வைராக்கியமாக மிளிர்கிறது. அதாவது வேண்டியது வேண்டாதது, இவைகளைப் பிரித்தறிந்து, தம் அறிவு என்ற வைராக்கியத்தால், வேண்டியதை ஏற்றுக் கொண்டு, வேண்டாததைத் தள்ளி, இல்லற தர்மத்தைக் கடைப்பிடிக்கிறான். அதுவே வைராக்கியம்.

அந்த அறிவு என்ற தந்தை, தெய்வீக அனுபவம் பெற, தெய்வீக குருவை (ஞானகுருவையல்லவா) சுட்டிக் காட்டுகிறார். அக்குரு மூலமாக, அக்குழந்தை தெய்வீக அறிவு பெற்று, இவ்வுலகம் இறைவனின் உடைமை என்றும், இவ்வுலகம் இறைவனின் இயக்கம் என்றும், அவனன்றி அணுவும் அசையாதென்றும், நம்பிக்கையுடன் ஏற்றுக்கொண்டு, ஸ்ரீபகவன் நாமரூபத்தில் நம்பிக்கை கொண்டு, இவ்வுலகமோ, அதன் பொருள்களோ, நானும் அல்ல, என்னதும் அல்ல, என்னுடையதும் அல்ல, எல்லாம் அவனே, எல்லாம் அவனால், எல்லாம் அவனுடையதே, என்றும், நடப்பதெல்லாம் நாராயணன் செயலென்றே, நடப்பதெல்லாம் ஈசன் செயலென்றே, உண்மையில் நிலைத்து நின்று, அவனன்றி அணுவும் அசையாதென்ற நிலையில், வைராக்கியம் என்ற கால்களால், உலக காலத்தைக் கடந்து, இறைபதம் என்ற, தெய்வ நிலையைப் பெற்று விடுகிறான். [illegible] அனைத்திலும், நம்பிக்கை என்ற கைகளும், வைராக்கியம் என்ற கால்களுமே, ஒருவனுக்கு தெய்வீக நிலைக்கோ பரமபதத்துக்கோ (பரமுக்திக்கோ) வழிகாட்டியாக அமைகிறது. லௌகீகத்திற்கும் (இல்லற தர்மத்துக்கும்) தெய்வீகத்திற்கும் (தெய்வீக தர்மத்திற்கும்) நம்பிக்கையும் வைராக்கியமுமே, உபகரணமாக இருக்கிறது.



உ

இவ் விரண்டிற்கும் மேலாக, பரமார்த்
திகத்திற்கும், நம்பிக்கையும், வைராக்கி
யமுமே, "அனுபவ ஞானம்" தரவல்லதாகும்.
பாரமார்த்திகம் என்பது, ஜீவன் முக்தியாகும்.
இங்கு எந்த தர்மா தர்மமும் இல்லவே இல்லை!
இது தாம் தாமான நிலை. இது தனக்கன்னியம்
இல்லாத நிலையாகும். இங்கு நம்பிக்கையும்
வைராக்கியமும், எப்படி செயல் படுகிறதென்றால் ???
இங்கு ஸத்குரு வாக்கியத்தில், முழுமையான நம்பிக்கை
வைக்கவேண்டும். இதை சிரத்தை என்றும் சொல்லுவார்கள்.
மேலும் உடல் உலக பொருள்களை, இல்லை இல்லையெனத் தள்
ளுவதில், மஹாமேருவைப் போல் அசைக்கமுடியாத வைராக்கியம்
வேண்டும். இதன் ரகஸ்யம் என்னவென்றால்? உடல் உலக பொ
ருள்கள், நாமரூபத்துடன் இல்லையென்றும்; அவை அதுவாக
(அனைத்தும் பிரம்மமாக) இருக்கிறதென்றும்; அதுவே நாம்
என்றும்; நாமே அது என்றும்; உறுதியான நம்பிக்கையும்
வைராக்கியமும் வேண்டும்! இந்த நம்பிக்கையும் வைராக்கி
யமும் ஒன்றென்றே சொல்லலாம்.

அதாவது???

"ஏதையும் நம்பாமல் ஒரு காரியம் செய்யமுடியாது."
செய்யவும் கூடாது! நம்பிக்கையென்பது நம் அறிவுக்கண்
ஆகும்! இந்த நம்பிக்கையே ஸத்குரு வாக்கிய அனுபவ
சிரத்தையாகும். மேலும் பொய்யான உலகை, உண்மை என இதுவரை
நம்பி, ஏமாந்துகொண்டிருக்கிறோம். அப்படிப்பட்ட உலகை,
இல்லவே இல்லையென, தள்ளுவதில் வைராக்கியம் வேண்டும்!
ஸத்தியத்தை உண்மையென ஏற்பதில், நம்பிக்கை வேண்டும்!
பொய்மையை இல்லையென தள்ளுவதில், வைராக்கியம் வேண்டும்!

உ



இந்த நம்பிக்கையை, இன்னொரு வகையில் விளக்குவதென்றால்? உடல், உலகம், பொருள் இவைகள், தூல நாம ரூப வஸ்துக்களாகும். நீயும் வினைசம்பந்த தூல உருவம் தாங்கி வந்திருக்கிறாய். ஆனால் உன் வினையை இயங்க வைப்பதோ, சூட்சும மாயா மனமாகும். மனம் சூட்சுமமாக இருந்தாலும், அது ஓர் நாமரூபமுள்ள ஒன்றைத்தான் பற்றிநின்று, அசைக்க முடியுமே தவிர, அம்மனம் சூட்சுமத்தில் நிலைத்து நிற்காது. அப்படியானால் அம்மனம், ஓர் நாமரூபத்தில் பற்றியே நிற்க வேண்டும். நிற்கவும் முடியும். ஆகவே மாயா சொரூபனை சூட்சும இறைவனுக்கும், நம் போன்று ஓர் நாமரூப வடிவத்தை, நம் கற்பனை சொரூபமாக கொடுத்து, உடல் உலக பொருளாகிய, நாமரூப ஜகத்தை அனைத்தும் உன்னுடையதே என்றும், அனைத்தும் உன் இயக்கமே என்றும், பரிபூரண நம்பிக்கையுடன், "அவன் ஏற்றுக் கொண்டான்" என்ற "நம்பிக்கை கொண்டு", தீவிர வைராக்கியமுடன்",

அவனும் நானும் ஒன்றே! அவனும் அதுவும் ஒன்றே! அவனும், நானும், அதுவும் (தத் த்வம் அஸி) ஒன்றே என்ற "பரிபூரண நம்பிக்கையுடன் வைராக்கியம் பூண்டால்" அதுவே ஜீவன் முக்தி யென்ற பிறவா நிலையாகும்!

"நம்பிக்கை யென்பது, ஸ்திரத் தன்மையாகும்!"

"வைராக்கியம் என்பது, அந்த ஸ்திரத் தன்மையில் மஹா மேருவைப் போல் அசையாதிருப்பதாகும்"!

"நம்பினோர் கெடுவதில்லை!!!"

அது இல்லாமல்?

"வீழ்ந்தவர் அழிந்தவரே!!!"



80 உ

கேள்வி:- இறைவனுக்கும், மஹான்களுக்கும், மனம் இல்லை யெனச் சொல்லுகிறீர்களே, அப்படியானால் அவர்கள் செய்யும் காரியங்கள், மனம் உள்ளதைப் போல் தோற்றுகிறதே. அது எவ்வாறு? அவர்கள் இச்ஜீவர்களுக்கு, அனேக காரியங்கள் செய்வது போல் தோற்றுகிறதே, மனம் இல்லாமல் இவ்வாறு செய்ய முடியுமா?

பதில்:- இதுவும் நல்ல கேள்விதான். மனமும் புத்தியும் ஒன்றே. மனம் என்றால் ஓர் எண்ணம். புத்தி யென்றால் அந்த எண்ணத்தை நிலைப்படுத்தி, பலவாக தோற்றுவிப்பதாகும். (இவையே கற்பனை யென்றும் சொல்லலாம்) அறியாமையில் உழலும் மானிடரிடம், மனம், புத்தி வழியில் செயல்படும். அறிவோடு சாதனை செய்து வரும் அன்பர்களிடம் கூர்ந்த புத்தியாக (இறை குரு உணர்வாக) இருக்கும். இதில் ஓர் விசேஷம் என்னவென்றால்???

இறைவன்:- மாயா சொரூபம். மனம் இல்லாதவன். ஆனால் மாயாவை தன் வசம் கொண்டவன். அந்த மாயையினால் இச்ஜீவர்களின் வினை, மனம், அறிந்து, விதி நாயகனாக செயல்பட முடியும். அது அவனுக்கு கைவந்த கலை!

மஹான்கள்:- (ஸாமான்ய மஹான்கள் அல்ல) பரிசுத்தம் செய்யப்பட்ட தூய வடிவம். அவர்கள் உண்மை, இன்மையை உணர்ந்து, ஸத்தியத்தில் நாம் நிலை பெற்று, அஸத்தியத்தை முழுமையாகவே விட்டுவிட்ட தன்மையினால், அந்த மாயா மனம் இவர்கள் பிடியில் அகப்பட்ட தன்மையினால், அது மஹத்தாகி அறிவாக பிரகாசிக்கும். அந்த அறிவில் மாயை இராது. நம்பிக்கை, வைராக்கியம் இவைகளால் ஸாந்தி, அமைதி, திருப்தி இவைகளால், தெய்வ அம்ஸமும் பெற்று, ஆனந்த வடிவோடு இருப்பார்கள்.

இறைவனுக்கு மனம் இல்லையானாலும், நம் மாயையினால் மனம் உள்ள ஜீவர்களுக்கு, மனம் இருப்பது போல் தம் கருணைப் பிரபாவத்தினால் நிரம்பி நிற்கவும் முடியும். தம் சாட்சித் தன்மையால், அவ்வவர் உள்ளங்களிலும், தாம் அந்தர்யாமியாக இருந்து கொண்டு, இதய வாஸியாக வாசம் பண்ணிக் கொண்டு அவர்களின் நிலை கண்டு, மனம் வினை கண்டு, அவர்கள் வினையின் நிலையில் தான் செயல்பட்டாலும், அவர்கள் கேட்பதை கொடுப்பது போல் ஓர் பாவனையைக் காட்டி அவனால் நடிக்க முடியும்! அப்படி நடிப்பதில் அவன் வல்லவன்.



உ

ஆகவே இறைவனை "கபட நாடக சூத்திரதாரி".
என அவனை உணர்ந்த ஸ்ரீமஹான்கள் சொல்வார்கள்.
ஸ்ரீமஹான்களுக்கு, தெய்வ அம்சம் இருந்தாலும், அவன் மாயையை நாம் ஏற்றுக் கொள்வதில்லை. இறைவன் சூட்சுமமாக இருப்பதால், அவன் மாயையை அவன் பற்றியிருப்பதால், அதன் இயக்கம் அவனை பாதிக்க முடியாது. அது அவன் நிழலே. மஹான்கள் தூலமாக இருப்பதால், அவர்கள் அம்மாயையைத் தம் வசப்படுத்துவார்களேயானால், அம்மாயையை இயக்க அவசியம் மனம் வேண்டும்! தம் மாயையிருப்பு மனதைக் கொண்டு இயக்க வேண்டுமானால், அஹங்காரம் வந்தே தீரும். மனமும் அதைசார்ந்த அஹங்காரம், அதிகாரம் இருந்தால் அது பிரவர்த்தியே! அது நிவர்த்தியாகாது. நிவர்த்தியில் சென்று, மனம் மறைந்த மஹான்களுக்கு, மாயையும் தேவையில்லை! மனமும் தேவையில்லை! ஆனால் அறிவாக அவர்கள் இருப்பார்கள்.

"அறிவு" – "கூர்க்கத் தெரிந்த மருந்து" என ஸ்ரீமஹான்கள் சொல்லுவார்கள். திருமூலரும் ஓர் பாடலில் கடைசி அடியாக, "ஒரே நோக்கத்தில் கொள்வீரே" என்றார். இன்னும் ஓர் பாடலில், இரண்டென்றான். இரண்டும் ஒன்றென்றான், ஒன்றென்றும் இல்லையென்றான், உணர்வு தெரியலையே! அதாவது

**உணர்வும், உணர்வதும் இல்லை!!"**

என்பதே இதன் கருத்தாகும்! இதன் உட்பொருள் என்னவென்றால்? இரண்டு என்றால் துவைதம்! ஒன்று என்றால் அத்வைதம்!! அந்த ஒன்றும் இல்லையென்றால் அது, **"ஸ்வய அநுபவம்!"** அங்கு சுவையும் இல்லை! அதை அநுபவிப்பவனும் இல்லை! அதாவது மாம்பழமும் இல்லை! அதை சுவைப்பவனும் இல்லை! ஆனால் வாக்கிய விளக்கத்திற்காக, ஒருவன் (இறைவன்) வந்தான். ஓர் மாம்பழம் (உலகை) கொண்டு வந்தான். அவன் அதை ஜீவநிலையில் சுவைத்தான். அவன் சென்றுவிட்டான். ஆனால் அவன் வந்ததற்கோ, இருந்ததற்கோ, பழம் சுவைத்ததற்கோ, சென்றதற்கோ, எந்த தடயமும் இல்லை!

## உ



விவகார ஸத்தியமாக, இதுவரை உலகம்
இயங்கியதாக கூறப்படுகிறது. ஆனால்
உலகமோ, இறைவனோ, அவன் ஜீவநிலையில்
இயங்கியதோ, அவன் சுவை அனுபவமோ,

இதை "சொல்வாரும்" } "இல்லை"
இதை "கேட்பாரும்" }

ஆனால் ஒன்றுண்டு. ஆனால் இல்லை! அதாவது

"இருப்பு" உண்டானால் "உண்டு"!!!
"இருப்பு" இல்லையானால் "இல்லை"!!!

என உற்றுணர்ந்து அறிவதுவே அறிவாகும்!
இப்படி உணர்ந்து அறிந்தவன் இருந்தும், இல்லாதவனே!

அப்படிப்பட்ட ஸ்ரீமஹானுக்கு, மாயைதான் இருந்தென்ன? இல்லாமல் போயென்ன? மாயையின் மைந்தனாகிய, மனம்தான் இருந்தென்ன? இல்லாமல் போயென்ன? உலகம் தோன்றினாலென்ன? அது தோன்றாமல் போனாலென்ன? அவன் இல்லாதவனே.

"ஆனால்??? ஸ்ரீமஹானின்றி,
அவன் "ஒருவன்"! இருந்தால், இறைவனும் இருந்தே ஆகவேண்டும். அவன் மாயையும் இருந்தே ஆகவேண்டும். இவ்வுலகமும் இருந்தே ஆகவேண்டும். அதன் இயக்கமும் இருந்தே ஆகவேண்டும். ஜீவ இயக்கமாகிய மனமும் இருந்தே ஆகவேண்டும். ஆனால் அவன் மனம் மறைந்தாகி விட்டாலும், மனம் உடைய ஜீவர்களுக்கு, அவனிடம் மனம் இருப்பதைப் போல் தோன்றும். இது மஹாமாயாவான "யோகமாயாவின்" சிறப்பு ஆகும். அந்த ஒருவன் வாக்கு உடல் உலக நிலையில்,
"பொய்யே!!!"



தெய்வ நிலையில், பொய்யே மெய்யாகவும்,
மெய்யே பொய்யாகவும், அச்ஜீவனின்
நிலைகளுக்கு மனம் கண்டு, வினை கண்டு,
“தோற்றம் மறையும்”!
அது ஸ்திரமல்ல!

பரநிலையில் மௌனாநந்தமே ஸ்வயமாய் இருக்கும்.

முடிவு!

தெய்வ நிலை மாயா கார்யமாகவும், சூக்ஷ்மமாகவும், இருப்பதால், அதன் கருணைப் பிரவாகமே மனம் உள்ளதைப் போல் தோற்றும். ஆனால் மனம் இல்லை!

ஸ்ரீமஹான்கள் நிலை தாவமாக நேர்வதால், யோகமாயாவின் சாமர்த்தியத்தினால், நம்மும் ஜீவர்களின் மனதை எடுத்து, அதன் மூலமாக வினை, மனம், விதி அறிந்து செயல்படுத்திவிட்டு, அவர்களிடமே அம்மனதை வைத்து விடுவார்கள். ஆகவே இங்கும், பரகருணை நிலையில் மனம் உள்ளதைப் போல் தோற்றும். ஆனால் மனம் இல்லை!

தெய்வநிலை யோகமாயாவால் இயங்கப்படுவதால், அச் ஜீவர்களின் புண்ணிய பாப கர்மாக்களை, அவை சமமாகச் செயல்படுத்துவதால், நம் ஸ்ரீபகவான் கருணையால் இரங்கிடுகிறாரா மனதுடன் நமக்கு ஆவன செய்கிறான் என்று, இச் ஜீவ மனதானது ஸ்ரீபகவானுக்கும் மனம் உண்டு என்றும், மனதால் தான் செயல்படுகிறான் என்றும் எண்ணத் தோன்றும். ஆனால் அவனிடம் மனம் இல்லை. ஸ்ரீமஹான்களின் நிலை தாவமாக செயல்படுவதால், அவர்களின் யோகமாயாவை வைத்தே அவர்கள் இயங்குகிறார்கள் என்பதை இச்ஜீவ மனம் அறியாமல், அவர்களும் நம் போன்ற மனது உடையவர்கள் என எண்ணத் தோன்றும். ஆனால் அவர்களிடம் மனம் இல்லை.



9. உ

<u>கேள்வி</u>:— எண்ணம், சொல், செயல் ஆகிய இம்மூன்றும், மனம் சம்பந்தம் கொண்டதா? வினை சம்பந்தம் கொண்டதா? விதி (இறைவன்) சம்பந்தம் கொண்டதா? மனம், வினை, விதி ஆகிய இம்மூன்றும் இணைந்து இயங்கக்கூடியதா? ஒன்றில்லாமல் ஒன்றில்லை என்பது, தெளிவாக தெரிகிறது. ஆனாலும் எண்ணமே வாக்காக வெளிவருகிறது. அவ்வாக்கே செயல்பாடாகிறது. ஆகவே எண்ணம், சொல், செயல் இவைகளை கட்டுப்படுத்துவது என்றால், அது முடியுமா? முடியாதா?

<u>பதில்</u>:— முன்பே வினை, மனம், விதி இவைகளுக்கு சிறந்த முறையில், நன்கு விளங்கும் முறையிலும், விளக்கம் தந்திருக்கிறேனே, இன்னுமேன் குழப்பம்?

<u>கேள்வி</u>:— உண்மைதான். அவ்விளக்கம் போதுமானதே! இதில் கருவி (ஞானேந்திரியம் 5, கர்மேந்திரியம் 5) களும், 4 அந்தக்கரணங்களும் (மனம், புத்தி, சித்தம், அஹங்காரம்) இணைந்தே செயல்படுவதால், எது முந்தையது? எது பிந்தையது? எது, எதை எதால், எப்படி இயக்குகிறது என்ற ஒரே குழப்பமாக இருக்கிறது. ஆகவே இக்கேள்வியை கேட்கிறேன்.

<u>பதில்</u>:— இப்போது நிறைய விளக்கம் கொடுத்தால், அவசியம் உணர்ந்து கொள்வாயா?

<u>கேள்வி</u>:— உங்கள் பதில் கேட்கும்போதே, இதற்கு முடிவு காணமுடியாது என்றே தோன்றுகிறதே? பின் இதை எப்படி நாங்கள் சரி செய்ய முடியும்?

<u>பதில்</u>:— <u>தூக்கணாங்குருவி கூடு</u> பார்த்திருக்கிறாயா?

<u>கேள்வி</u>:— ஓ ஓ பார்த்திருக்கிறோம். அது ஓர் <u>அபூர்வமான பின்னல்</u>தான்.

<u>பதில்</u>:— <u>பூர்வத்தை</u> விளக்க வார்த்தை உண்டு, அதை விளக்கலாம். <u>அபூர்வத்தை</u> விளக்க வார்த்தை உண்டா?

<u>கேள்வி</u>:— புரியவில்லையே. எங்களையே குழப்புகிறீர்களே. யாம் ஓர் கேள்வி கேட்டால் பதில் சொல்லாமல், <u>புதிர் கேள்வி போட்டே எங்களை திகைக்கவைத்தால்</u>, நாங்கள் என்ன செய்வோம்? பின் யாரிடம் கேள்வி கேட்டு சந்தேகநிவர்த்தி செய்வோம்?



உ

பதில்:- குழந்தாய்! இது புதிர் கேள்வியல்ல. இது அபூர்வ விளக்கமே!

கேள்வி:- விளக்கம் ஒன்றும் சொல்லாமல் அபூர்வ விளக்கம் என்று எப்படி சொல்கிறீர்கள்?

பதில்:- அந்த தூக்கணாங் குருவி கூடே, ஓர் போதுமான விளக்கம் ஆகும்!

கேள்வி:- எண்ணம், சொல், செயல் சம்பந்த கர்மாவுக்கும் (வினைக்கும்) அதில் பிணைந்து இயங்கும் மனதிற்கும், அதை நடத்தி வைக்கும் விதிக்கும் (இறைவனுக்கும்) "சம்பந்தா சம்பந்தம்" என்ன என கேட்டால், பதில் தூக்கணாங்குருவி கூட்டை அடிக்காட்டுகிறீர்களே? இது எப்படி பொருந்தும்?

பதில்:- ஓர் சிறிய கேள்வி? அத்தூக்கணாங் குருவிக்கூட்டை "அதைப்போல்!" ஒருவரால் கட்டமுடியுமா? "அக்கூட்டை"! எவரொருவராவது, அப்பின்னலை சிக்கலின்றியும், அறுந்துபோகாமலும், பிரிக்கமுடியுமா?

கேள்வி:- (சற்று ஆழ்ந்து சிந்திக்கின்றான்) முடியாது ஐயா! இப்போதுதான் எம் கேள்விக்கும் விடை கண்டு கொண்டோம்!

பதில்:- (சிரித்துக்கொண்டே) என்ன கண்டு கொண்டாய்?

கேள்வி:- எங்கள் கேள்வியாகிய எண்ணம், சொல், செயல் ஆகிய இம்மூன்றும், வினை, மனம், விதி இவைகளால் பிணைக்கப்பட்டது. அதாவது கீழே கூறிய மூன்றும், மேலே கூறிய மூன்றிலும்தான் இயங்குகிறது என உணர்கிறோம்.

பதில்:- இதை சற்று விளக்கி உணர்ந்தவற்றை, எளிய முறையில் சொல்பார்ப்போம்.

கேள்வி:- ஐயா! "எண்ணம்" வருவது "வினை"யால்! என உணர்ந்தோம். "சொல்" வருவது "மனதால்!" என உணர்ந்தோம். "செயல்" நடைபெறுவது "விதி"யால்! என உணர்ந்தோம். மேலே கூறிய ஆறும் முப்பிரிவு வழியால்/



உ

பின்னும் பின்னும் திரும்பத் தால், இவைகளை
பிரிக்கவோ, விலக்கவோ, மாற்றவோ,
மறுக்கவோ, நிராகரித்தாக்களாலும் ஆகாது.
பதில்:- நல்ல விளக்கம் குழந்தாய்! ஆனால்
பின்னால், பிரித்தெடுக்கும் வகையை கூற
வில்லையே. அதையும் சற்று விளக்குவாயப்போ?
கேள்வி:- (கடகடகடகடகட வென சிரித்தான்)
ஐயா, எம்மை மன்னிக்கவும். தாங்களோ ஓர் சிறிய
கேள்வி கேட்கிறேன். அதற்கு தாங்கள் விடை கூறிவிட்டால்
உங்கள் கேள்விக்கு யானும் விடை தருகிறேன்!
பதில்:- ஓ ஓ ஓ ஓ ஓ ஓ "பதிலுக்கே!" ஓர்
"கேள்வியா???" (சிரித்துக் கொண்டே) எங்கே
உன் கேள்வி என்ன?
கேள்வி:- உங்களை யாம் கேட்கக் கூடாதா என்ன?
பதில்:- அவஸ்யம் கேட்கலாம். தந்தை சிவனையே குழந்தை
முருகன் கேள்வி கேட்டு, தகப்பன் ஸ்வாமி ஆனதை உண்மைதானே?
கேள்வி:- ஐயா! ஐயா!! அந்த அளவுக்கும் போக வேண்டாம்.
என்றென்றும் யாம் உம் குழந்தையே, தாங்கள் எம் தந்தையே!
பதில்:- சரி சரி உபசார வசனமெல்லாம் நமக்கு வேண்டாம்.
ஏதோ ஓர் கேள்வியெனச் சொன்னாயே, அது என்ன கேள்வி?
கேள்வி:- ஐயா தாங்கள் குருவிக் கூட்டை சுட்டிக் காட்டி,
எம் அறிவை பிரகாசிக்கச் செய்தவர்களாலே! அக்குருவி
அக்கூட்டை கட்டுவதற்கு அப்பறவை "பலம் உள்ள!"
எந்த சாதனங்களையும் (புல், குச்சி, துரும்பு) பயன்படுத்துவதில்லை.
"பலமற்ற!" கரும்பின் தோகையையே பயன்படுத்தும்.
(ஆனால் அது சற்று பலமாகவே இருக்கும்) அத்தோகையே நம் அவகா
பொடியாக கிழிக்க ஏதுவாகும். இக்கூட்டை ஆண்பறவை தான்
கட்ட வேண்டும். கட்ட முடியும். ஆண்பறவை அக்கூட்டை
கட்டும் நேரம் சரி. பெண்பறவை அங்கு முட்டையிட்டு அடைகாத்து,
குஞ்சு பறக்க வைக்கும் பரியந்தம், அக்கூட்டில் போக்கு வரவு செய்யும்.



உ

குஞ்சு பறந்து வெளியேறி விட்டால், அந்த ஜோடி இரண்டும் இரவு காலங்களில் மரங்களில் தங்குவதில்லை. "செடிகொடி"கள் அடர்ந்த இடங்களில் தான் தங்கி, அடுத்த இனப் பெருக்கம் வரை சஞ்சாரம் செய்யும். அடுத்து அப் பெண் பறவை கருவுற்றால், உடனே அந்த ஆண் பறவை, "புதிய" கூடு ஒன்றை கட்டுமேயன்றி "பழைய" கூட்டை தேடுவதும் இல்லை, அதை நாடுவதும் இல்லை!

பதில்:- பலேபலே! நல்ல விளக்கம், நல்ல அனுபவம். சரி சரி அப்புறம் என்ன? உன் கேள்வியையே காணோமே?

கேள்வி:- பொறுங்கள் ஐயா! இப்போது தானே கதை முடிகிறது. இனித்தானே கேள்வி வரும்.

பதில்:- உன் போன்று எமக்கும் கதையில் ஆர்வம் உண்டு தான். ஆனாலும் கேள்வி கேட்கிறேன் என சொல்லி விட்டாயே, அதனால் தான் அவ்வாறு கேட்டோம்.

கேள்வி:- ஐயா! அப்பறவை எத்தனை சிந்தனையுடன், எத்தனை சிரமத்துடன், தன் குடும்பத்திற்காக, "யாருமே" அப்படி அமைக்க முடியாத தான "அழகிய" கூட்டை ஒரு முறைக்கு மேல் மறு முறை பயன் படுத்துவதில்லையே, நாம் நம் கவனக் குறைவால், எண்ணம், சொல், செயலால், வினை, மனம், விதி கொண்டு பின்னிப் பிணைந்த இவ் "வினை" கூட்டை (உடலையும் அதன் செயல்களையும்) பகுத்துப் பகுத்துப் பார்த்து, வினை எப்படி அமைகிறது என்றும், மனம் எப்படி இயங்குகிறது என்றும், விதி (இறைவன்) இவைகளை எப்படி நடத்துகிறான் என்றும், இந்த "பின்னல்" எப்படி பிரித்தெடுக்கிறதென்றும்,



உ

வீண் ஆராய்ச்சி நமக்கெதற்கு? அந்த
விண்கூடு பற்றிய எண்ணம் தேவையா???

பதில்:- (கட கட கட கட வென சிரித்துக்கொ
ண்டே) பலே ஜோர்! பலே ஜோர்! என்
சமர்த்தான, சாமர்த்திய குழந்தாய்! அவசியம்
உனக்கு தேவையில்லை! நீதானே கேள்வி
கேட்டாய்? ஆகவே "உன்" மூலமாகவே,
"யாமே" விளக்கினோம். சரிசரி உன் பதிலால், முடிந்த
முடிவாக, உன் அனுபவத்தால் தரும் ஸத்திய வாசகம் என்ன?

கேள்வி:- மனதால் வந்த வினை. அவ்வினையை நடத்த விதி
யென்ற இறைவன். வினைக்கோ அது நடைபெறும் விதிக்கோ,
"மனம்" தானே காரணமாகி இருக்கிறது. அம்மனமே இல்லை
யென்றாகிடும் போது, வீடேது? கூடேது? பின்னவேது?
அதைப் பிரிப்பதேது? இந்த (மனதின்) கதை எதற்கு???

பதில்:- என் குழந்தாய் அதை இப்படித்தான் பாரேன்!
முன் "ஜன்மா" பற்றிய எண்ணமும் தேவையில்லை.
பின் "ஜன்மா"வும் இல்லவே இல்லையென முடிவு பண்ணு
தற்சமயம் உள்ள "ஜன்மா"வும் கந்தர்வ நகரம்!
என எண்ணி மறந்துவிடு. கந்தர்வ நகரம் என்பது வானின் மாயாஜாலம்.
(மேகக்கூட்டங்களில் தோன்றும் ஓர் காட்சி) அதாவது
பஞ்சு பஞ்சாக, பந்து பந்தாக, (கார்மேகம் (மழைமேகம்) இல்லாமல்) திரண்டு
ஓடும் போது, மழைமய கற்பனையை விரித்துப் பார்த்தால், மாட
மாளிகைகளும், கூட கோபுரங்களும், ராஜபாட்டை
வீதிகளும், நிறைந்த ஓர் காட்சி தெரியும். சற்று நேரத்தில்
அனைத்தும் கலைந்து மறைந்துவிடும். இங்கு அக்காட்சிக்காக
மேக கூட்டம் வந்ததும் இல்லை. மனமும் வெகு காலம் கற்பனையை
விரிக்கவும் இல்லை. இதில் மேகம் வந்ததால் மழைமய கற்பனையும்
விரிந்தது. மேகம் இல்லையானால் கற்பனையும் இல்லையெனவாம்.



உ

அந்த மேகங்கள் வந்ததோ, சஞ்சாரம் செய்ததோ

"நிர்மலமான ஆகாயம்!"

ஆகும். மேகம் மறைந்தவுடன் ஆகாயம் ஒன்றே மிஞ்சும். "அதுவே நாம், நாமே அது" என உறுதியால் நிலைத்து நின்று கொண்டு;

"வினை" யென்னும் மேகக்கூட்டங்களையும் (தாவங்களையும்)

"மனம்" என்னும் அதைச் சார்ந்த கற்பனைகளையும்,

"விதி" என்னும் காற்றின் அலைக்கழிப்பையும் (அசைவையும்)

முறைப்படி, வினை, மனம், விதி யென்ற நிலையில்,

"தோற்றம், மாற்றம், மறைவு;"

என உறுதியாக நம்பி, இவைகளின் சிறியமாற்றத்தால்,

"ஏமாறாமல்!" ஸ்திரமாக இருப்பதுவே முடிந்தமுடிவாகும்.

வினையும் இல்லை! மனமும் இல்லை! விதியும் இல்லை! இவைகள் வந்ததும் இல்லை! இருந்ததும் இல்லை! விளையாடியதும் இல்லை! மறைந்ததும் இல்லவே இல்லையென "சும்மாவே, சுகமாக" இருப்பாயாக என முடிக்கிறேன்!

ஓர் சிறிய விளக்கம்.

நனவில் பொருள்களை தேடி, ஓடி, நாடி அடைவதைப்போல் அடைகிறாய்.
கனவில் பொருள்கள் உன்னை நாடி வருவதைப் போல் காண்கிறாய்.
ஆழ்ந்த உறக்கத்தில் நீ போகவும் இல்லை. அது வரவும் இல்லை.
நனவு கனவு இவ்விரண்டிலும் கற்பனையில் இருக்கிறாய்.
ஆழ்ந்த உறக்கத்தில் கற்பனை செய்யும் மனம், உன் ஆன்மாவில் லயித்து இருக்கிறது. ஆகவே சுகமாக தூங்கினேன் என்கிறாய். ஆகவே இருந்தால் இந்த "லயத்திலே" இந்நிலை சுகம் இருக்குமானால், அதேமனதை உன் ஆத்மாவிலேயே "மயமாக்கினால்" நீ என்ன ஆவாய்???
அதுவே நீயாய், நீயே அதுவாய் பிரம்மானந்த மயமாவாய்!



உ

கேள்வி:— ஆலயங்களிலும், ஸ்ரீ மஹான்களிடமும் பிரஸாதம் வாங்குவதில் ஆச்சாரக் கட்டுப்பாடு உண்டா? அவை எந்த வகையில் ஏற்பது? பிரஸாதம் கொடுக்கும் நிலையும், அவை வாங்கும் நிலையும் எப்படி அமைய வேண்டும்? அங்கு சந்தேகம் வரக் காரணம் என்ன?

பதில்:— இது நல்ல கேள்வியே! சாதம் உலக குணதோஷ நிலையாகும். பிரசாதம் ஸத்வகுண தெய்வ நிலையாகும்! இங்கு பொதுவில் குறிப்பிடுவது சந்தேகமும் அச்சந்தேகத்தால் வரும் பயமுமே காரணம் ஆகும்! "பயமே பலிதம்"! இங்கு ஸ்ரீ பகவான் மீதும், ஸ்ரீ மஹான்கள் மீதும், நீ கொண்டுள்ள "நம்பிக்கையே"! உனக்கு பயனும், பலனும், பலமும் ஆகும். ஸ்ரீ பகவான் சந்நிதியில் நிவேதனமாக வைக்கப்பட்ட எந்த பொருளும், ஸ்ரீ மஹான்கள் கரம் பட்ட எந்த பொருளும், தம் "குணதோஷங்களை"! இழந்து விடுகின்றன. இழந்தே ஆகவேண்டும். அப்படி இல்லையாயின், ஸ்ரீ பகவானும், ஸ்ரீ மஹான்களும் "ஸத்தியமாக"! இல்லையென்றே பிரமாணமாகச் சொல்லுவோம். காரணம் மனம் வசப்பட்ட மானிடர், அறியாமையினாலோ, அறிந்தோ (வினைவசம் கொண்டோ) "உலக" நிலையில் கர்ம பாபமோ "பஞ்சமஹாபாபமோ"! (பாதகமோ) பண்ணியிருக்கலாம். இது அறியாமை என்ற அஞ்ஞானமே! அவை கவனக் குறைவால் வந்த இருளே! அவைகளை பூரண சைதன்யம் "ஒளி" உடைய ஸ்ரீ பகவானே, ஸ்ரீ மஹானே அவ்விருளை அகற்ற வல்லவராவர்,



உ

அவர்கள் இருந்தும் இல்லாதவர்களே. அவர்கள் "பொய்" யென்றே பிரமாணமாகச் சொல்லலாம். இதில் ஓர் உண்மை என்னவென்றால்? ஸ்ரீபகவான் பிரசாதம், இச்ஜீவர்களின் "வினைகளை" பக்குவப்படுத்தும். இச்ஜீவர்களின் ஸ்ரீமஹான்களின் பிரசாதம், "அறியாமையை" விலக்கி, காலம் நிரம்பில், அவைகளை அழிக்கும். இதில் ஸ்ரீ பகவானின் நிலை ஜீவ ரக்ஷிப்பு. ஸ்ரீமஹான்களின் நிலை ஜீவ அழிப்பு. (ஜீவத்துவத்தை நீக்குதல்)

"ரக்ஷிப்பு":- வினைகண்டு, மன இயக்கம் அறிந்து, காலம் பக்குவம் அறிந்து, ஜீவர்களின் தேவையை பூர்த்தி செய்வது.

"அழிப்பு":- வினைகண்டு, மனதை இயங்கச் செய்து, அச்சவனக் குறைவால் தோன்றும், நாம ரூப குணங்களை அழித்து, அச்சீவனுடைய ஜீவத்துவத்தை அழித்து. நீ ஜீவன் அல்ல, நிஜம் அம்சமான, "ஆத்மாவே" என உணர்த்துவதாகும்.

ஸ்ரீ பகவத் பிரசாதமும், ஸ்ரீமஹான்களின் பிரசாதமும் அதிக சக்தி வாய்ந்ததாகும். (ஸ்ரீமஹான்களின் தர்சனமோ, ஸ்பரிசமோ கிடைத்தால் உயர்வார்களேயன்றி தாழார்.)

மேலும் ஸ்ரீமஹான்கள் பூர்வ புண்ணியம், தற்சமயம் அவர்கள் சந்நிதியின் மனநிலை, வினைபரிபாகம், இவைகளை உணர்ந்து மேன்மேலும் மேல்நிலைக்கு, இட்டுச் செல்வார்களேயன்றி கீழ்நிலைக்கு ஒருகாலும் தள்ளமாட்டார்கள். அப்படி தள்ளுபவர் எவராயினும் அவர்கள் ஸ்ரீமஹான்கள் அல்ல. அவர்கள் "வியாபாரியும், விளம்பரதாரரும்," ஆவார்கள் என்பதே பிரமாண உண்மையாம்.



உ

இங்கு பிரசாதம் வாங்குபவரே, முக்கிய இடம் பெறுவதால், உண்மையின் பக்தியும், உணர்வின் ஞான வேட்கையும், உள்ளவர்களுக்கு, சந்தேகம், கலக்கம், பயம் வரக் காரணம் இல்லைதான். ஆனால் அனுபவம் இல்லாமல் பக்குவம் ஆகிக் கொண்டிருக்கும் ஆன்மாக்களுக்கு, ஸ்ரீபகவான் மீதும், ஸ்ரீமஹான்கள் மீதும், அவர்கள் வைக்கும் "நம்பிக்கையும்"! நாம் கடைத்தேறப் படுவோம் என்ற, "வைராக்கியமும்"! தான் அவர்கள் மூலதனமாகும். அவநம்பிக்கை பலன் தராது. சந்தேகமும், கலக்கமும், கலங்கமும், கொண்ட "பயம்"! உண்டானால், பயமே பலிக்கும் என்ற நிலை ஏற்படத்தான் செய்யும். ஆனால் அவர்களுக்கும் அந்த பிரசாதங்களினால், எந்த உபாதையும் இல்லையெனவும், வரவும் முடியாது எனவும்,

பிரசாதம் பொறுப்பல்ல. அவர்கள் "பயம்"! மனமே பொறுப்பு.

"பலன்"! தராவிட்டாலும் "பயம்" (சக்தி) அவசியம் எனவும் பிரமாணமாகச் சொல்வோம்.

தரும்; "இங்கு மனம் போல் வாழ்வு" என்றபடி தான் உண்டாகும். அதாவது மனமே கலங்க, கலக்கத்தால், அந்த பய உபாதை உண்டு. அவர் உண்ணும் பிரசாதம், பயத்தால் பலன் மறைபடுவதால், அது "சாதம்"! என ஆகிவிடும்! காரணம் அது அருள்பிரசாதமாகும். ஆகவே எந்த துர்க்குணங்களும், துர் நிகழ்ச்சிகளும், அவசியம் வராது. அங்கு ஸ்ரீபகவானும் ஸ்ரீமஹான்களும், அப்பிரசாதத்தின் [illegible]யாக இருந்து கொண்டு "விடைமனம்"! கண்டு செயல்படுவர். இது சத்தியம்.



இதில் உள்ள முக்கியம் என்னவென்றால்?
ஸ்ரீ பகவான் பிரசாதத்தைவிட, ஸ்ரீ மஹான்கள் பிரசாதமே "மஹாபிரசாதம்" என ஆகும் என் தன்னை உணர்ந்த ஸ்ரீ மஹான்களின் அனுபவம் ஆகும். அதாவது?

ஸ்ரீ பகவான் பிரசாதம்:- நமது வினைகளின் பாதிப்பை குறைக்க வல்லது. முழுமையாக அழிக்க முடியாது. அழிக்க கூடாது.
ஸ்ரீ மஹான்களின் பிரசாதம்:- பூர்வ புண்ணியம் உள்ளவர்களுக்கே கிடைக்கும். இப்பிறவியில் பக்குவப்படும் ஆன்மாக்களுக்கும் கிடைக்கும். பூர்வ புண்ணியம் உள்ளவர்களுக்கு கிட்டினால், "மனம் மஹத்தாகும் நிலை" விரைவில் கிடைக்கும் என்பார்கள். இச்ஜன்மாவில் பக்குவப்படும் ஆன்மாக்களுக்கு கிட்டினால், "மோக்ஷம்" என்ற திறை அகவமார்க்கம் உண்டு என்பார்கள்.
ஸ்ரீ பகவத் பிரசாதம்:- "வினைக்கு"
ஸ்ரீ மஹான்களின் பிரசாதம்:- "மனை" பக்குவத்திற்காகும்.
ஆகவே அப்பிரசாதங்களை ஏற்கும் ஸ்ரீ மெய்யன்பர்கள் அனைவரும் மன ஓர்மையுடனும், சந்தேகம், கலக்கம், களங்கம், பயம், இல்லாமையும், "எல்லாம் நீயே" என்ற "மஹா மந்திர" ஸ்மரணையுடன், ஆனந்தமாக ஏற்று, அவரவர் வினை, மனம் இவைகளை இல்லாமல் செய்து, அதுவே நாம், நாமே அது என்று ஒன்றுவீர்களாக.



உ

கேள்வி:- தாங்களுடைய பிரம்ம ரகஸ்யம் என்ற நூலில் படித்தபோது || இவது பக்கத்தில் கூறும் வாசகம்:-

இயற்கையென்ற இறைவனின் சிருஷ்டி, ஜடகடபடம் என்ற நிலையில், மண், மலை (கல்) மரம், செடி, கொடி, புல், பூண்டு என்றும், இவைகள்தான் இறைவன் சிருஷ்டித்தான் என்றும் கூறிவிட்டு அடுத்து 84 லட்சம் ஜீவகோடிகளின் நாமரூபங்கள் அனைத்தும், அதாவது "நாமரூபங்கள்" அனைத்தும் இந்த மாயா மனதின் எண்ணங்களாகும் என குறிப்பிட்டிருக்கிறீர்களே! அப்படியானால்???

1. மனிதனைத் தவிர அனைத்து ஜீவகோடிகளும், கண்ணுக்குத் தெரியாத கிருமி கீடகங்கள் அனைத்தும், (நடப்பன, ஊர்வன, பறப்பன, நீந்துவன) இந்த மாயாமனதின் சிருஷ்டியா? மாயையின் சிருஷ்டியா?

2. மனிதனைத் தவிர, அனைத்து ஜீவ கோடிகளும் வினைகளை எப்படி பரிமாறிக் கொள்கின்றன? அவைகளுக்குந்தான் மனம் இல்லையே, அங்கு வினைபரிமாற்றம் எப்படி நிகழ்கிறது?

3. அனைத்து ஜீவகோடிகளுக்கும், இயற்கையின் நிலையில் இறைவன் நாமரூபம் கொடுத்தானா? இந்த மாயாமனம்தான் கொடுத்ததா?

4. பரசொரூபமே இறைசொரூபம் என்றும். இறைசொரூபமே நாம் என்றும். பரம், இறை, நாம், ஆகிய இம்மூன்றும் ஒன்றே என்றும் கூறும் தாங்கள், இவை அனைத்தும் ஓர் விளையாட்டே எனவும் கூறுகிறீர்களே. இவ்விளையாட்டு பரத்துடையதா? இறைவனுடையதா? இச்ஜீவனுடையதா? இவ்விளையாட்டு மாயா சம்பந்தம் கொண்டதா? மாயாமனம் சம்பந்தம் கொண்டதா? இவ்விளையாட்டின் முடிவு என்ன? இவ்விளையாட்டை எவர் முடிக்கிறார்கள்? பரமாகிய அது நவம் சுகம் என்றால் அது சுகமாக "சும்மா" இருக்கலாமே? தாயை செய்து அது ஏன் விளையாட வேண்டும்? சற்று விளக்கமாகவே அமையவும்.



பதில்:- இது "கலக்கம் பயம்" இல்லாத நல்ல கேள்வியே. இப்படி பட்ட குழந்தையே எமக்குத் தேவை. இப்படிக் கேள்விகளை நீ கேட்பதின் மூலம், "யாம் தெளிவடைகிறோம்"

கேள்வி:- தெளிவடைய யாம் கேள்வி கேட்டால், அதில் நாங்கள் தெளிவடைவதாக கூறுகிறீர்களே! அது எப்படி பொருந்தும்?

பதில்:- யாம் வேறு, நீ வேறு அல்ல! உன் வடிவத்தில் யாம் இருந்து கொண்டு, இக்கேள்விகளை யாமே கேட்டு, யாமே தெளிவடைந்து ஆனந்திக்கிறோம். கேள்வியும் யாமே! பதிலும் யாமே!

கேள்வி:- இவ்வாசகம் நாங்கள் ஒருவருக்கே பொருந்தும். ஏனையோருக்குப் பொருந்தாது. நாங்களும் உங்கள் நிலையைப் பெற்றுவிட்டால், உங்கள் வாசகம் பொருந்திடும் பொருந்தும்.

பதில்:- குழந்தாய்! பொருந்திடும் பொருந்தும் என்ற, சந்தேக வசனம் வேண்டாம். இறுதிகாலத்தில் உணர்வாய்.

இனி உன் கேள்விகளுக்கு விடையை கவனமுடன் கேள்!

2. மனிதனைத் தவிர, அனைத்து ஜீவ கோடிகளும், வினைகளை எப்படி பரிமாறிக்கொள்கின்றனர்? ______ அவைகளுக்குத்தான் மனம் இல்லையே? அங்கு வினை பரிமாற்றம், எவ்வாறு நடைபெறுகிறது?

எம் பதில்:- இக்கேள்விக்கு முன் 1, 2, 5, 6, பக்கங்களில் பதில் உண்டு! ஆனாலும் பின் வரும் 1, 3, 4, கேள்விகளில் சில விளக்கம் வரும். அவைகளை கவனமுடன் உணர்வாயாக.

1. மனிதனைத்தவிர அனைத்து ஜீவகோடிகளும், கண்களுக்குத் தெரியாத கிருமி கீடகங்கள் அனைத்தும், (நடப்பன, ஊர்வன, பறப்பன, நீந்துவன) இந்த மாயா மனதின் சிருஷ்டியா? மாயையின் சிருஷ்டியா?



உ

1ம் பதில்:- அவை அனைத்தும் "மாயையின்" சிருஷ்டியேயன்றி மாயாமனதின் சிருஷ்டி இல்லை. மாயையில் இந்த மனம் தோன்றினாலும், சிருஷ்டிக்கும் வல்லமை, இந்த மனதிற்கு, இல்லையென்றே சொல்லலாம். இதில் ஓர் உண்மை யென்னவென்றால்?

"மாயையின் சிருஷ்டி ரூபநாமம்,"

"மாயமனதின் சிருஷ்டி நாமரூபம்"!

என மஹான்கள் சொல்வார்கள். அதாவது (மூன்றாவது கேள்விக்கும் விடை இதில் அடங்குகிறது) ஜடகடபடாதிகளான, மண், கல், மலை, மரம், செடி, கொடி, புல், பூண்டு இவைகள், இயற்கையின் நியதியில், இறைவன் சிருஷ்டித்தவை. இச்சிருஷ்டிகள் அனைத்தும், "ரூபத்தோடுதா"! அவன் அவைகளுக்கு "நாமம்" கொடுக்கவில்லை. காரணம் அது அவனுக்குத் தேவை இல்லை. அதற்கும் காரணம் அவனிடம் கற்பனையின் மனம் இல்லை. அதே இறைவன் தம் அம்ச மனிதனை சிருஷ்டிக்கும் போது, அவன் விளையாடுவதற்காக மாயாவின் அம்ச, "மனதை" கொடுத்தான். இந்த மனமானது, மற்றைய மூன்று யுகங்களிலும், மனிதனின் (மஹான்களின்) வசமே இருந்தது. இக்கலியுகத்தில் மட்டும், இறைவன் தம்மை மறைத்துக் கொண்டான். (இதுவே "கலியுக" நியதியாகும்.) ஆகவே மாயாமனம் இவனைப் பற்றிக் கொண்டது.



உ

மனம் இம்மனிதனைப் பற்றிக் கொண்ட
தன்மையினால், இறைவனால் சிருஷ்டிக்கப்
பட்ட, அனைத்து பொருள்களுக்கும், இவனே
தம்மாயாமனதின் கற்பனையால் "நாமா
வை" கொடுத்தான். இறைவன் சிருஷ்டி
"ரூபம்" என "மண், மலை, மரம், செடி, கொடி, புல்பூண்டு, மற்றும் ஜீவசரீரங்கள்
ஒன்றே. மாயாமனதின் சிருஷ்டி நாமா என்ற பெயர் வைத்தது.
மட்டும் அது ரூபநாமாவாக திகழ்ந்தது. பின்
இம்மனம் படைத்த மனிதன், மனம் வசம் அகப்பட்ட
தன்மையினால், "தேவை"களையும், "ஆசை"களையும்,
மேலும் மேலும் பெருக்கும்போது, தேவைகளையும் ஆசைகளையும்
வைத்தே அனைத்திற்கும், தம்மனமேய கற்பனை வடிவில்,
பெயரை (நாமாவை) முதலில் எண்ணிக் கொண்டு, பின் அப்
பெயருக்கேற்றபடி, உருவத்தை (ரூபத்தை) உண்டாக்கினான்
அவையே காலக்கிரமத்தில் "நாமரூபமாக"
திகழ ஆரம்பித்தது.
விளையாட வந்த இந்த மனமானது, விளையாட்டை விபரீதமாகவும், வினையமாகவும்
கொண்டதால் "வினை" இச்ஜீவனைப்பற்றிக் கொண்டது. (இது கலியின் நியாயமே)
விளையாட்டு:- அவன் (இறைவன்) பொருள்! அவன்
இயக்கம்! எல்லாம் அவனே! அவனன்றி அணுவும் அசை
யாது என்ற ஓர்மித்த எண்ணத்துடன் இவ்வுலக வஸ்துக்களை,
"போகம்" என அனுபவித்தாலும், அவை "தியாக
மாக" மாறி, வினையும் இல்லை! ஜன்மாவும் இல்லை என முடியும்!
வினையம்:- (அது வினையெனப்பொருள் படும்) இதில்!



நான், என்னுள், என்னுடையதை அடிப்ப-
டையாக கொண்டு, "அதிகாரம்",
"அஹங்காரத்துடன்",
"உரிமை"யும், "உடை-
மை"யும் கொண்டாடும்போது, சூடு, சுரணை, லஜ்ஜை,
வெட்கம் முதலியவை, "அபிமானமாக"!
இந்த மனம் படைத்த மனித ஜீவன், "மாயாமனம்"
பற்றிக் கொண்டதென ஸ்ரீமஹான்கள் சொல்லுவார்கள்.
ஆகவே ஜடகடபடாதிகளின் ரூபத்தையும், அனந்த
ஜீவகோடிகளின் ரூபத்தையும், இயற்கையின் இறைவன்
"தான்" படைத்தான். இவை ரூபமாகத்தான் திகழ்ந்த-
தே தவிர, எந்த நாமாவையும் இறைவன் கொடுக்-
கவும் இல்லை! அவைகளும் எந்த நாமாவையும் ஏற்கவும்
இல்லை! முந்தைய மூன்று யுகங்களிலும், இருந்த ஸ்ரீமஹான்களும்
அச்ஜகத்திற்கு எந்த நாமாவும், "செயற்கையின்"
நியதியில் கொடுக்கவில்லை. அவைகளும் இயற்கையாகவே
இருந்தது. ஸ்ரீமஹான்களும் பஞ்சபூதங்களை அப்படியே ஏற்று
அழைத்தனர்! அமைத்தனர்! அனுபவித்தனர். மற்றும் மரம்,
செடி, கொடி, புல்பூண்டு என முழுமையாக அழைத்தனர்! அமைத்தனர்!
அனுபவித்தனர்! அவைகளை "ரூப"மாக பிரிக்கவும் இல்லை.
வேறு எந்த நாமாவும் கொடுக்கவும் இல்லை! அவைகளிலிருந்து



உ

எந்த உருவத்தையும், கற்பனை பண்ணவோ, உண்டாக்கவோ இல்லை. அவர்களிடம் "தேவை"களும், எந்த "ஆசை"களும் இல்லாதிருந்தது. அவர்களின் உணவு, உடை, இருப்பிடம், ஆகிய இம்மூன்றுமே, இயற்கையாகவே இருந்தது.

உணவு:- காய், கனி, கிழங்கு, இலைகள் இவைகளே! (அரிசியோ, நவதானியமோ அன்று இல்லை. அங்கு அக்கினியும் தேவையில்லை. எதையும் வேகவைப்பதில்லை)

உடை:- திகம்பரர்களாகவே திசைகளையே ஆடையாக உடையவர்களாக இருந்தார்கள். அவர்களிடம் எந்த கோர குணங்களும் இல்லவே இல்லை! ஆகவே ஆடை தேவையில்லை.

இருப்பிடம்:- நிலங்கண்டு மரங்களின் கீழும், மரங்களின் மேலும், குகைகளிலும், பாறைகளிலும் வசிப்பார்கள்.

ஆனால் இந்த கலியுக மனிதன் மனதின் வசம் "வசமாக" மாட்டிக்கொண்ட தன்மையினால், கோர (விகார) குணங்களுக்கு அடிமையாகி, அக்குணவிருத்தியினால் இறைவனால், உண்டாக்கப்பட்ட அனைத்தையும், தம் மன கற்பனையினால் ஓர் "நாமத்தை" வரித்துக்கொண்டு அதன் நிலையில் ஓர் தோற்றமுள்ள "ரூபத்தை" உண்டாக்கிக்கொண்டான். இந்த மனித ஜீவனும் சாமான்யன் அல்ல. இவனும் இறைவன் அம்சமே! ஆகவே இறைவனின் ரூபநாமங்களை மாற்றி தம்மன வல்லமையால், நாமரூபத்தை உண்டு பண்ணிக்கொண்டான். இவைபோலவே பறப்பன, நீந்துவன, ஊர்வன, நடப்பன, அந்த நாலுவர்க்கத்தையும், கிருமி கீடங்களையும், இறைவனே ஓர் தோற்றம் (ரூபத்தை) கொடுத்து, அவைகள் அனைத்தையும், தம் அம்சமாக்கி இணைத்துக்கு,



"உபகாரமாகவும்" "ஆதரவாகவும்" படைத்தான் இறைவன்.
ஆனால் இன்றைய கலியுக தோஷ மனம்
படைத்த மனிதன், மேலே கூறியவைகளை,
"அபகாரமாகவும்" "ஆகாரமாகவும்"
தம்முடைய தோரகுணங்களால் ஆக்கிக் கொண்டான்.

ஆகவே இயற்கையின் சிருஷ்டி இறைவனுடையதாகும்!
" செயற்கையின் சிருஷ்டி மனிதனுடையதாகும்!!

அதாவது இறைவன் சிருஷ்டியில் மண், மலை, மரம் செடி, கொடி,
புல், பூண்டு, மற்றும் ஜீவசரீரங்கள் என்பதை பன்மையில்
மணல்கள், மலைகள், மரங்கள், செடிகள், கொடிகள், புல்
பூண்டுகள், மிருகங்கள், பறவைகள், மீன்கள், புழுபூச்சிகள்,
என்று மட்டுமே இருந்தது. ஆனால் "நாமரூப விகா
ர. ரகாரக" (விதவித) குண தோஷ சம்பந்த எந்த
தோற்றங்களும் இல்லவேஇல்லை. மனம் படைத்த இக்கலியுக
மனிதனே, மணலில் பல விதம் என்றும், மலைகளில் பலநாமாக்கள்
என்றும், மரங்களில் பலவிதம் என்றும், செடிகளில் பலவிதமென்
றும், கொடிகளில் பல விதமென்றும், புல்பூண்டுகளில் பலரகம்
என்றும், மிருகங்களில் பல இனம் என்றும், மீன்களில்
பலவிதமென்றும், பறவைகளில் பலரகமென்றும், புழு
பூச்சிகளிலும், ஊர்வனவைகளிலும் பற்பல விதவித நாமத்
தை கொடுத்து, "விகாரப்படுத்தி" பல விதங்களில்
"விவகாரத்திற்கு" உள்ளாக்கிவிட்டான்,
இந்த மனம் படைத்த மனிதன்.



உ

இறைவன் உபகாரமாக கொடுத்ததை அபகாரமாக ஆக்கிக் கொண்டான்:— மண் மலை (கல்) மரம் செடி, கொடிகள், இயற்கையின் நிலையில் அனுபவித்தால் "சுகம்" உண்டு. ஆனால் அவைகளுக்கு வேறு நாமாவையும், ரூபத்தையும், தம்முடைய கற்பனை வடிவில், "நாமரூபம்" என ஆக்கிக் கொண்டதால், உபகாரமானதை அபகாரமாக்கிக் கொண்டான் இன்றைய கலியுக கோரமனம் படைத்த மனிதன்.

அதைப்போலவே?

இறைவன் ஆதாரவாக கொடுத்ததை, ஆகாரம் என ஆக்கிக் கொண்டான்:— மண் மலை (கல்) மரம் செடி கொடிகள், இயற்கையின் நிலையில் ஆதாரவாகவும் நட்பு என்ற முறையிலும் கொடுத்ததை, அதன் "ரூபநாமத்தை" அழித்து தம்முடைய தேவைக்கும் ஆசைக்கும் இன்பத்திற்கும் ஏற்றவாறு, "நாமரூபத்தை" உண்டுபண்ணி இயற்கையை கெடுத்து அழித்து செயற்கையாக்கி அவற்றை கண்டு களிப்பதை மாற்றி உண்டு கழித்து, கெடுத்து விட்டான் இன்றைய கலியுக கோரமனம் படைத்த மனிதன். இவை அனைத்திற்கும் மூலகாரணம் அந்த மனிதனின் "மோகமும்" (வெறியான ஆசையும்.) அதன் "போகமும்" அதிகார அகங்கார கலி நோயின் காரணமும்.



உ

4. கேள்வி:— A பரசொரூபமே இறை சொரூபமென்றும், இறைசொரூபமே நாம் என்றும், பரம், இறை, நாம் ஆகிய இம்மூன்றும் ஒன்றே என்றும், கூறும் நாங்கள், இவை அனைத்தும் ஓர் விளையாட்டே எனவும் கூறுகிறீர்கள்.
இந்த விளையாட்டு பரத்துடையதா? இறைவனுடையதா? ஜீவனுடையதா?

B. இவ்விளையாட்டு மாயா சம்பந்தம் கொண்டதா? அல்லது மாயா மனம் சம்பந்தம் கொண்டதா?

C. இவ்விளையாட்டின் தன்மை யென்ன? முடிவு என்ன?

D. இவ்விளையாட்டை இறைவன் ஆடுகிறானா? ஜீவன் ஆடுகிறானா?

E. பரமாகிய அந்த ஒன்று நவம் சுகம் என்றால், அது சும்மாவே சுகமாகவே, இருக்கலாமே? அதுஏன் இந்த விளையாட்டை விளையாட வேண்டும்?

A. கேள்வி:— எல்லாம் ஒன்றே என்ற நிலையில் அந்த விளையாட்டு பரமா? இறைவனா? ஜீவனா? எவர்க்குரியது??

பதில்:— இதை மேலெ சூத்ரதாரியாக சொன்னால் இவ்விளையாட்டு (பரம் விளையாடாது விளையாட முடியாது) "இறை ஜீவ" விளையாட்டென்றே சொல்லலாம். ஆனால் இறைவன் வேறு, ஜீவன் வேறு, இல்லவே இல்லை. இவ்விருவரும் ஆனந்தமாகவே இருக்கிறார்கள். ஆனந்தமாகவே விளையாடுகிறார்கள். ஆனால் "அவஸ்தை" மனதிற்கே.

மாயையாய பற்றிய நிலையில் இறைவன் ஆனந்தமாகவே இருக்கிறான். மனதால் பற்றப்பட்ட நிலையில் ஜீவன் ஆனந்தமயமாக இருந்தும் அந்த ஆனந்தத்தை அனுபவிக்க முடியவில்லை. இச் ஜீவனும் அந்த மனதை அது பிறந்த இடமாகிய மாயையிடம், அனுப்பி விட்டால் தானும் ஆனந்தமாக இருக்கலாம். இம்மனதின் துக்கம் எல்லாம், நான், என்னால் என்னுடையது என்ற அகங்கார, அதிகார அபிமானத்தாலும், இந்த "இல்லாத உலகை" இருப்பதென மனமடமையால் நம்பி; "உடைமை;"



பாராட்டி, "உரிமை" கொண்டாடி "மனதைக் கொண்டே மனதிடம் மோதி" சண்டையிட்டுக் கொள்வதுவும், இறைவனுடைய நாமும், அவனைப்போல், ஆனந்தமாக இருக்கவும், விளையாடவும், முடியவில்லை. நாமும் மாயாமனதை சர்வார்ப்பணமாக "எல்லாம் நீயே" என விட்டுவிட்டால், விளையாட்டையும் ஆனந்தமாக கண்டு களிக்கலாம். வினை சேராமல் உண்டும் கழிக்கலாம்.

மனதைக் கொண்டே மனதிடம் மோதி:- மனிதனைத் தவிர மிருகம், பறவை, மீன் இவைகளிடம் மோதுகிறோமா? அதாவது உடைமை பாராட்டி, உரிமை கொண்டாடுகிறோமா? இல்லவே இல்லை. "மனம்" படைத்த மனிதனிடமே "மனம்" படைத்த மனிதன் மோதுகிறான். "பணிவே உன் பாதை" என்றும், விட்டுக் கொடுத்தால் விக்கினங்கள் மறையும், என்றும், நாணல்போல் தாழ்ந்து நின்றால் வாழ்ந்து நிற்பாய், என்றும் ஸ்ரீமஹான்களுடைய அனுபவ ஸத்திய வாசகங்களை, மனம் பின்பற்றினால், "வினை" அழியும், "விதி" மறையும். ஆனந்தமாக விளையாட வேண்டியதை மட்டும் விளையாடிவிட்டு "ஆனந்தத்தில்" கரைந்து கலந்து மயமாகலாம். (இங்கு மனதிடம் மனம் மோதாது.)

கேள்வி:-

கே. இவ்விளையாட்டு மாயா சம்பந்தம் கொண்டதா? இல்லை மாயா மனம் சம்பந்தம் கொண்டதா?

பதில்:- நாடகமோ, சினிமாவோ, T.V. காட்சியோ, இவை அனைத்தும் திட்டமிட்டு தயாரிக்கப்பட்ட ஓர் காட்சியாகிய நிகழ்ச்சியே. அதைப்போலவே உலகமாகிய நாடக மேடையில் "மாயா" தயாரிப்பாளரினால், உருவாக்கப்பட்ட கதையில்,



உ

"மாயாமனம்!" என்பவன்
பலதரப்பட்ட வேஷங்களில் நடிக்கிறான்.
அந்த மனதிற்கு ரூபம் இல்லை. ஆகவே
இந்த மண் பொம்மைகளை கூடக் கூடவியாது,
எடுத்து ஆடிக் கொண்டிருக்கிறான். இந்த மண்
பொம்மைகளையும் மற்றும் உடைமைகளையும், உரிமை பாராட்டி,
அதிகாரத்தோடும், அஹங்காரத்தோடும், அபிமானத்தோடும்,
"நடித்தால்!" தான் அது பொருத்தமாகவும்,
அதிசுவாரஸ்யமாகவும் இருக்கும். இதில் ஓர் உட்கருத்து
என்னவென்றால்? இறை அம்ச "ஆன்மா!"
பரசொரூப "ஆன்மா!" சைதன்யமே இவைக
ளுக்கு, ஆதாரமாகவும்! ஆதரவாகவும்! ஆகாரமாகவும்!
வழிநடத்துகிறதென்பது, அதிரகஸ்யமாகவும், மஹாமௌன
மாகவும் இருக்கிறது. ஆனால் இவ் ஆன்மாவுக்கும் ஊடரக்
டர் மாயாவுக்கும், நடிக்கும் மனதிற்கும், சொந்தக்கால்
பந்தமும், பந்தத்தால் பாசமும், பாசத்தால் பற்று என்கிற வினை
தொடர்பும் உள்ளதைப்போல், பந்தப்பட்டதைப்போல்
தோற்றும் ஜீவ ஆன்மாவுக்கும், எந்த தொடர்பும் இல்லையென
பிரமாணமாக சொல்வோம். இதை உதாரணமாக சொல்வது என்
றால், குவளை ஜலம் ஆன்மாவாகும்! குவளை வேஷம் ஜீவன்
ஆகும்! நான், என்னால், என்னுடையது குவளையின் சீல் ஆகும்!
எந்தவிநாடி, "சீல் உடைக்கப்படுகிறதோ!"




உ

அந்த விருடியே, உலகமாகிய நாடகமேடையி
லிருந்தும், "மன" நடிகன் என்னும் நிலை
யிலிருந்தும், மாயா டைரக்டர் பிடியிலி
ருந்தும் விலகி, சுதந்திரப் பறவையாகிறான்
ஜீவன் முக்தன். இதுவே ஜீவாத்மா ஆத்மா ஆகும்
நிலை!

௦. கேள்வி:— இவ்விளையாட்டின் தன்மை என்ன? முடிவு என்ன?
பதில்:— மாயா இறை சொரூபம் "ஸத்வகுண"/
சம்பந்தம். மாயா மனதின் பிடியில் அகப்பட்ட மனித ஜீவன்
"முக்குண"/ சம்பந்தம். இவ்விளையாட்டின் தன்மை.
அந்த மனித ஜீவன் தம் முக்குணங்களில் (ஸத்வ, ரஜஸ், தமோ)
"இரண்டை" (ரஜஸ், தமோ) முழுமையாக விட்டு
விட்டு, ஏக குணமாகிய ஸத்வத்தில் நிலைத்து நின்று,
நாமே இறை சொரூபமாகி, பின் அதையும் "போதும்"/
என்று நிறைவோடு விட்டு விட்டு, தம் யதார்த்த சொரூபமா
கிய, பரத்தோடு கலந்து மயமாகுவதே இவ்விளையாட்டு.
இவ்விளையாட்டு "மாயா மனதிற்கே"/
தவிர, மாயாவுக்கோ (இறைவனுக்கோ) பரசொரூபத்திற்
கோ, இல்லவே இல்லை. அதுவே இறைவனாகவும், ஜீவனாகவும்,
பருவதால், ஜீவனைப் பற்றிய மனதை விடுவதே விளையாட்டு.
இதன் முடிவு, பூர்வ புண்ணியமும், இறை இருப்பையும், ஸ்ரீ மஹான்களின் ஆசியும், ஸ்ரீ ஸத்குரு கடாட்சமும் பெற்று
அப்பக்குவ ஆன்மா, "சிரத்தையுடன்"/



உ

அம்மாயா விளையாட்டிலிருந்து விடுதலை பெறுவதால், ஸத்சிஷ்யனின் ஜீவன் முக்தியே முடிந்த முடிவாகும். அதுவே அவ்விளையாட்டின் தன்மை.

D. கேள்வி:— இவ்விளையாட்டை இறைவன் முடிக்கிறானா? ஜீவன் முடிக்கிறானா?

பதில்:— இறைவனும் ஜீவனும் ஒன்றே! பந்தப்பட்டதால் ஜீவனென ஆனான். "சாட்சியாக" பார்த்துக் கொண்டிருந்ததால் இறைவன் இறைவனாகவே இருக்கிறான். இந்த பந்தப்பட்ட ஜீவன், "நாம் ஜீவன்" அல்ல என்றும், நானும் நம் அம்ச இறைவனும், அந்த காலாதீத பரமும், "ஒன்றே" என்றும் தம் ஸ்வய அனுபவத்தால் என்று தெளிவடைகிறானோ, அந்த வினாடியே இந்த ஜீவனே தம் விளையாட்டை முடிக்கிறான்! இதில் "ஸத்குரு வாக்கிய சிரத்தையே" இச்ஜீவனால் விளையாட்டை முடிக்கும் ஆதிகாரணம்!

E. கேள்வி:— பரசொரூபமாகிய அந்த ஒன்று, நவம் என்றும், சுகசொரூபம் எனவும் சொன்னால், அது சும்மா சுகமாகவே இருக்கலாமே? அது ஏன் இந்த வினையின் விபரீத விளையாட்டை விளையாட வேண்டும்?



2

பதில்:— காலாதீத ஒன்றான பர சொரூபத்திற்கு, நாமம், ரூபம், குணம், குறி, காலம், தேசம், வர்த்தமானம் (பற்று வரவு, போக்கு வரவு, கொடுக்கல் வாங்கல் என்ற "வியாபாரம்") எண்ணம், சொல், செயல், இவை அனைத்திலும் ஒன்றான நிலையில் (இவை ஒன்றும் இல்லா நிலையிலும்) "வாக்குக்கு" எட்டாததான அதற்கு விளையாட்டு என எப்படி இருக்கக் கூடும்? எப்படி இருக்க வாய்ப்பு இருக்கிறது? அது சுத்தப் பொய்யே!

கேள்வி:— முடிந்த முடிவாக தாங்கள் கூறும் வாசகம்; "எல்லாம் ஒன்றே!" அப்படியானால் அதன் பொருள் என்ன? அதிலிருந்து எது தோன்றினாலும், "அது அதுதானே"? அதற்கென நியமம் எதுவும் இல்லாத தன்மையில் அந்த விளையாட்டும், அதனுடையது தானே? அது ஏன் இப்படி ரகரகமாக, பலவிதமாக ஆக்கிக் கொண்டு ஏன் அது விளையாட வேண்டும்? சும்மா சுகமாக இருக்கலாமே?

பதில்:— அது ஒன்றும் விளையாடியதாகவோ, விளையாடுவதாகவோ, எமக்குத் தோணவில்லையே! உனக்கு மட்டும் எப்படி அது விளையாடுவதாக சொல்ல முடிகிறது?

கேள்வி:— கேலி செய்கிறீர்களா! உலகம் இருக்கிறது. ஜீவர்கள் இருக்கிறார்கள். இறைவன் இருக்கிறான். அனைத்து இயக்கமும் இவ்வுலகமாகிய நாடக மேடையில், இருக்கிறது. இவை அனைத்தும் உப்பு, உறைப்பு, புளிப்போடு "காரசாரமாக"! விளையாடுவதை நாங்களும் காண்கின்றோம். நீங்களும் காண்கிறீர்கள். அப்படியாயின் இது அதன் விளையாட்டு இல்லையா?



௨

பதில்:- சரி சரி உன் வாக்கையாலும் ஒப்புக்கொள்கிறோம். நீ இதுவரை சொன்ன நாம ரூபங்களையும், அவைகளின் ஆட்டபாட்ட காரசார விளையாட்டுகளையும், பார்ப்பது யார்? கேட்பது யார்? அதுபற்றி புலம்புவது யார்?

கேள்வி:- (ஆழ்ந்து சிந்தித்தான்) யாம் என்றோ, நாம் என்றோ, சொன்னால் அது பன்மையாகிறது. அது நான்களையும் சேர்த்து பிணைக்கும். அது பொருந்தாது தான். ஆகவே மேலே சொன்னவைகளை, "நானே" பார்த்தேன்! "நானே" கேட்டேன்! "நானே" அதுபற்றி பேசினேன்!

பதில்:- நானே பார்த்தேன், நானே கேட்டேன்; நானே பேசினேன் எனச் சொல்லும், நீ ஜடதாவமா? உள்ளே அந்தர்யாமியாகிய இறைவனா? உன் அறிவு சொரூபமா? பார்த்து கேட்டு பேசிய, கற்பனையின் மனமா? கொஞ்சம் கவனமாகப் பார்த்துச் சொல் பார்ப்போம்?

கேள்வி:- (ஆழ்ந்து தீவிரமாக சிந்தித்தான்) என் தாவம் ஜடம். இறைவன் சாட்சி, அவன் காட்சிக்கு வரமாட்டான். அறிவு உள்நோக்கிச் செல்லுமேயன்றி புறச் செயலுக்கும், புறக் காட்சிக்கும் வராதது தான். ஆகவே இந்த மனமே என் "எண்ணம், சொல், செயலாக" வருவதாக உணர்கிறேன். அப்படியானால் அதுவும் என் மனதின் விளையாட்டு தானா? இதை இன்னமும் உணராமல் நான் இருப்பதற்கு காரணம் என்ன? எது என்னை மறைக்கிறது? எப்படி அந்த திரையை விலக்குவது?



உ

பதில் :- இதை சற்று கூர்ந்து கவனிப்பாயாக.
பார்த்தேன் என்றும், கேட்டேன் என்றும்,
பேசினேன் என்றும், இந்நிலையில் இன்னும்
அநேக விளக்கம் கொடுக்கும்
“நீயார்?” பேசும் மனமா? உணரும் அறிவா?

1. பார்த்தேன் = பார்த்தது ஏன்? (பாராமல் இருந்திருக்கலாமே)

2. கேட்டேன் = கேட்டது ஏன்? (கேளாமல் இருந்திருக்கலாமே)

3. பேசினேன் = பேசியது ஏன்? (பேசாமல் இருந்திருக்கலாமே) இப்படி பலதரப்பட்ட வார்த்தைகளில் எல்லாமே “ஏன்? ஏன்? ஏன்?” என்றே கேள்விக்குறியாகவே இருக்கும் ஜகம், உண்டென நம்பு கிறாயா? இந்த நாமரூப ஜக ஜீவ ஈஸ்வராதிகள் அனைத்தும், பார்த்தேன், கேட்டேன், பேசினேன், என மூன்றுநிலைகளிலும், “விகாரம்” அடைந்து, அவைகளே “விவகாரமாய்” வடிவெடுத்து, இவ்வுலகம் விவகார ஸத்தியமாய் தோற்றி, ஓர் மாயா நாடகம் நடந்து கொண்டிருக்கிறதை உணர்வாயாக!

மேலும் நானே(ண்) பார்த்தேன்? நானே(ண்) கேட்டேன்? நானே(ண்) பேசினேன் என அர்த்தபாவனையில் பார்த்தால், “நான் ஏன்?” இப்படி அகப்பட்டுக் கொண்டேன் எனப் பொருள் படும்.



உ

கேள்வி:- உண்மை தான். எந்த ஒரு வார்த்தையிலும், "கேள்விக்குறியாகத்தான்!" இந்த ஜகம் இருக்கிறதே யன்றி உண்மையில் இந்த ஜகம் இருப்பதாக தெரியவில்லையே? அப்படியானால் இவ்விளையாட்டு, யாருடையது என சொல்கிறீர்கள்?

பதில்:- இன்னுமா உனக்கு விளங்கவில்லையா? இந்த ஜகம் "மனதின்!" எண்ணமே! இந்த ஜகம் "மனதின்!" மனதின் தோற்றமே ஆதிக்கமே! இந்த ஜகம் மனதின் தோற்றமே! வேறு எவர் ஜகமாகும் போது, இவ்விளையாட்டு மனதையல்லால் இவ்விளையாட்டுக்கு மனம் பொறுப்பேற்க முடியும்? நீ கூறிய இவ்விளையாட்டுக்கு நான் பொறுப்பேயன்றி, ஜகத்தோ, ஜீவர்களோ, ஈஸ்வராதிகளோ, பொறுப்பேற்க முடியாது. இதை ஓர் அன்பர் பாடும் போது;

"சினம் இறக்கக் கற்றாலும்;
சித்தி எல்லாம் பெற்றாலும்;
மனம் இறக்கக் கல்லார்க்கு;
வாயேன் (சிந்தியாகமாட்டோம்) பராபரமே!!!"

என்னும் நிலையில் மனமே அனைத்துக்கும் காரணமாக இருக்கிறது.

கேள்வி:- நீங்கள் அடிக்கடி சொல்வீர்களே ஓர் ஸத்திய வாசகம். அதாவது, இவ்வுலகம், மாயைக்கும், அவித்தைக்கும், உள்ள ஓர் போராட்டம். அதாவது விளையாட்டு என்று, அதை சுருக்கமாக சொல்லுங்கள் பார்ப்போம்?



உ

பதில் :- பரம் என சொல்லக்கூடிய ஒன்று, பயன்படாத ஒன்றாகும். அதிலிருந்து தோன்றிய இறைவனும், அவன் அம்ச ஸ்வரூபமான மனம் படைத்த மனித ஜீவனுமே, இவ்வுலக விளையாட்டின் காரண காரிய சொரூபமாகும். இறைவன் "காரணம்" ஆவான். ஜீவன் "காரியம்" ஆவான். இறைவன் தனித்து இயங்க முடியாது (விளையாட முடியாது). காரணம் அவன் "சாட்சி". ஜீவனும் தனித்து நிற்க முடியாது. இச்ஜீவன் நிற்பதற்கு "குணங்கள்" வேண்டும். அது "மனதின்" இயக்கமாகும். ஆகவே இங்கு மனமே குணம், குணமே மனம்! என ஒன்றுபட்டிருக்கிறது. இங்கே?

இறைவன் உலகையும் அனைத்து பொருள்களையும், அவைகளை அனுபவிக்க, ஜீவர்களின் உடல்களையும் படைத்தான். ஆனால் நம் அம்ச மனிதனிடம் மட்டும், தம் மாயையின் சாயலான "மனதை" படைத்தான். இந்த மனம் படைத்த மனிதன் மட்டும், இந்த "கலியில்" மட்டும், அஹங்கார அதிகார, அபிமானங்களை, (நான், என்னுடையது என்று) ஏற்றுக்கொண்ட தன்மையால், குணதோஷ விளையாட்டுகளை "கார சார ரோஷமாக" விளையாடிக்கொண்டிருக்கிறான். மற்றைய மூன்று யுகங்களிலும் குணதோஷங்களும் இல்லை. இந்த காரசார ரோஷ விளையாட்டும் இல்லை. அங்கு ஆனந்தமும் அமைதியும் சாந்தியுமே இருந்தது. அதை விளையாட்டு என சொல்லவும் முடியாது.



“மனம்” இல்லையானால் விளையாட்டு இல்லவே இல்லை!

உ

ஆகவே இவ்வுலக விளையாட்டானது வாக்கிட யார்த்தமாக சொல்வது என்றால்?
இறைவன் “காரண” சொரூபமாக இருந்து கொண்டு, “காரிய” சொரூபனை, மனம் படைத்த மனிதனை வைத்து விளையாடுகிறான் என பொருள் கொள்ள வேண்டும். மனமே விளையாடுமிடம்.
ஆனால் இவ் விளையாட்டு பொருளற்றதே! ஞானியானவர்களுக்கு!
ஆனால் சாமான்யர்களுக்கு பயம், துக்கம், கலக்கம், காங்கம் நிறைந்த “கடுமை. கொடுமை” நிறைந்த, விளையாட்டாகும் குழந்தாய்! இப்போது இவ்விளையாட்டு உனக்கு தோற்றுகிறதா? தோற்றவில்லையா?
கேள்வி:- விளையாட்டா? யார் யாரிடம் விளையாடியது? எதற்காக ஏன் விளையாடினார்கள்? எங்கே நடந்தது? ஒன்றுமே காணோமே!
பதில்:- ஓ ஓ ஓ ஓ ஓ! குழந்தே நீ என்ன ஆனாய்?
கேள்வி:- ஒன்றும் ஆகவில்லையே! எப்போதும் ஒன்றாகத் தானே இருக்கிறேன்! என்ன நடந்தது??
பதில்:- ஒன்றும் ஆகவில்லை தான்! நீ விழித்திருக்கிறாயா? தூங்குகிறாயா? என சரிபார்த்தோம். “தூங்கி” விட்டாய்! (“ஹரிதயில்”) இந்த பேருறக்கம், “பிரம்மானந்தமாக” நிலை பெறுவதாக என ஆசி கூறுகின்றேன்! உரையாடல் நிறைவு பெற்றது!

பாபா



ஸத்தியம் பேசு. (ஸத்தியவாக்கு) ஓம் தர்மம் செய்.

நாவை அடக்கு. கருணையோடு இரு.

# "ஸ்ரீ ஸத்குரு திருவடித்துணை"

# "நம்பினோர் கெடுவதில்லை"!

1. சாதனையை விடுவதே சாதனை :— நான் அதைச் செய்கிறேன், இதைச் செய்கிறேன், யோகம் சாதிக்கிறேன், தியானம் செய்கிறேன், நாமஜபம் செய்கிறேன், பஜனை செய்கிறேன், என இன்னும் அனேக, ஸத்தான காரியம் செய்கிறேன், என்ற எண்ணங்களை, மூலத்தோடு விடுவதே சாதனையாகும்.

காரணம் ????

செய்கிறேன், செய்கிறேன், எனச் சொல்லும் நீ, அதன் உட்பொருளை கவனிப்பாயாக.

செய்கிறேன் = செய்கிறது ஏன்? என பொருள் படும். அதாவது அப்படியானால் செய்வது ஏன்? சும்மா சுகமாக இருக்கலாமே?



சும்மா சுகமாக இருந்தால், அது சோம்பல்
என ஆகி விடாதா, எனக் கேள்வி வரலாம்?
இறை உணர்வோடும், குரு உணர்வோடும்,
இருப்பது, சோம்பலும் ஆகாது, சாதனையும் ஆகாது!!
சோம்பலாகாது என்பதை வேண்டுமானால்,
ஏற்றுக் கொள்ளலாம். ஆனால் அது சாதனையாகாது
என்பதை, ஏற்றுக் கொள்ள முடியவில்லை, யெனக் கேட்கத்
தோணுதா? இறையையோ, குருவையோ, இது வேண்டும் என
ஏதாவது ஓர் எதிர்பார்ப்புடன், எதைச் செய்தாலும், அது சாதனைதான்.
எந்த எதிர்பார்ப்பும், சந்தேகமான கேள்விகளும், இல்லாமல்
"எல்லாம் நீயே!!!" என முழுமையாக
சார்ந்திருப்பது சாதனையாகாது. அது உன்னுடைய
சாக்ஷாத்காரம் ஆகும். சாக்ஷாத்காரம் என்பது,
உன்னுடைய "யதார்த்த சொரூபம்!!!" ஆகும்:
உன்னோடு நீயே, அன்னியமில்லாமல் ஒன்றாகி கலந்திருப்பது
சாதனையாகாது. அதுவும் மன எண்ணம் தானே? அப்படி
மன எண்ணமும், சாதனை தானே, எனக் கேட்கத் தோணுதா?
"நாமரூபமாக" ஜகத், ஜீவ, ஈஸ்வராதிகளை,
கற்பனை பண்ணுவது, மன எண்ணம் ஆகும். அவைகளை
முழுமையாக மறந்த நிலையில், எல்லாம் நீயே என முழுமையாக,
ஆனந்தமாக இருப்பது மன எண்ணமல்ல. அது "அறிவு"!
நிலையாகும்.



உ

கேள்வி:- மனஎண்ணங் களுக்கும் அறிவுக்கும், என்ன வித்தியாசம்? இரண்டும் ஒன்றாகத்தான், எமக்குப்படுகிறது?

பதில்:- கலக்கம், பயம், சந்தேகம், இவைகளுடன் கூடியிருந்தால், அது மனஎண்ணமாகும். அமைதி, திருப்தி, ஸாந்தி, ஆனந்தமுடன் இருந்தால், அது அறிவு ஆகும்.

கேள்வி:- அறிவு சொரூபமாக இருந்தாலும், அதுவும் எமக்கு, சாதனை போல், தோற்றுறதே காரணம் என்ன?

பதில்:- நீ அறிவு சொரூபமாக, இல்லாததே காரணமாகும். மேலும், அறிவு சொரூபம் என்பது, "சுவை" அனுபவமாகும். சுவையை சுவைப்பவன்தான் உணரமுடியும். அதற்கு உதாரணம் காட்டவோ, சொல்லவோ, வரிவடிவமோ, மற்றும் எதையும் விளக்கம் கொடுக்க இயலாததாகும். அது உணர்வுபூர்வமாகும். "உணர்ச்சி" இல்லாததாகும். உணர்வு என்பது, அறிவு பூர்வமாகும். உணர்ச்சி என்பது, மன கற்பனை வடிவமாகும்.

கேள்வி:- இறை குரு உணர்விற்கும், நாம் அவனாகவோ, (ஸ்ரீபகவானாகவோ) குரு உணர்ந்தும் அதுவாகவோ, (பரமாகவோ) ஆனால், அது சாக்ஷாத்காரம் என்று, சாதனையற்ற நிலையெனச் சொல்லும் தாத்பர்யம் (வித்தியாசம்) என்ன?

பதில்:- நாமரூப குணசம்பந்த, ஜகத் ஜீவ ஈஸ்வராதிகள் தோன்றி, இருந்து, மாறி, மறையும் தன்மையதாகும். ஆனால்



உ

இவைகள் அனைத்தும், அந்தகாவாதீத ஒன்றுக்கு, அன்னியமில்லை யென்பதே, பிரமாண உண்மையாகும். ஆகவே "அதுவே நாம்/ "நாமே" "அது"/ என்ற பூரணத்வம் பெற்ற பிறகு, எதை நோக்கி, எதற்காக, சாதனை செய்ய வேண்டும்?

கேள்வி:- அந்த நிலை பெறும் பரியந்தம், சாதனை செய்ய வேண்டியது அவஸ்யம் தானே?

பதில்:- சாதனை செய்யச் செய்ய, புற்றீசல் போல் மன எண்ணம், வந்து தோண்டேதான் இருக்கும். ஆகவே ஓர் பக்குவ ஆன்மாவானவன், "சிப்பியின் வெள்ளி" என, நாமரூபம் அனைத்தும் என உணர்ந்து, கண்டும் காணாமல், கேட்டும் கேளாமல், அவைகளை "விவகரிக்காமல் (அதிகம் பேசாமல்)" இதமாகவும், மிதமாகவும், இறை குரு உணர்வோடும், பேசினால்"

"வாக்கு மனதில் ஒடுங்கும்!

"மனம் மறைத்தில் ஒடுங்கும்!

"மறைத் நாமே ஆவோம்"!



உ

கேள்வி:- அப்படியானால், சாதனையே தேவையில்லையென சொல்கிறீர்களா? சாதனை (முயற்சி) இல்லாமல் எதையும் சாதிக்க முடியாதே!

பதில்:- உன் நிலையில், நீ சாதனையென எதை சொல்கிறாய்?

கேள்வி:- யோகம், தியானம், மந்திர ஜபம், மற்றும் "நிஷ்காம்யமாக" செய்யும் மன உருக்க பக்தி, இவைகள் தான் சாதனையாக எமக்குத் தோற்றுகிறது!

பதில்:- மேலே சொன்ன இவைகளின் குறிக்கோள் (லக்ஷியம்) என்ன?

கேள்வி:- இவை மனதை ஓர் நிலைப்படுத்தும் மார்க்கங்களாகும்!

பதில்:- இவைகளினால் "மனம்" அழியுமா? அடங்குமா?

கேள்வி:- (ஆழ்ந்து சிந்தித்து) மனம் அழியாதுதான். இவைகளினால் மனம் அடங்குமே!!

பதில்:- அடங்கிய மனம், திரும்பி எழுந்தாலே செய்யும்? மனம் அழிந்தால் தானே, மறக்காக முடியும்?

கேள்வி:- உண்மைதான், மனம் அழிந்தால் தான் நாம் மறக்காக முடியும்! அப்படியானால், யாம் கூறிய வழிமுறைகளை விட்டுவிட்டு, வேறு முறையில் மனதை அழிக்க முடியும் என்கிறீர்களா? அது சுலபமான மார்க்கமா? கடினமான மார்க்கமா?



உ

பதில்:- அதி சுலபமான வழிதான். இக் "கலியுக" கோர குணங்கள் அழிந்து மனம் மறைந்தாக வேண்டுமானால் தியானம் யோகம் இவைகளை விட, "தியாகமே"!!! மனம் அழியும் மார்க்கமாகும்.

கேள்வி:- யோகத்திற்கும் தியாகத்திற்கும் உள்ள வித்தியாசம் என்ன? தியாகத்தினால் மனம் அழியும் என தாங்கள் சொல்லும் கருத்து என்ன?

பதில்:- யோகம் என்றால் கட்டுதல்! தியாகம் என்றால் விடுதல்! ஆகவே "மனக்கட்டுப்பாட்டுடன்!" செய்யும் சாதனையை விட, அம்மனதை, இயல்பாக விடுவதே, சாதனை! இதனால் இக்கலியுக கோர குணங்களை ஜயித்து மனதை மறைந்தாக்க முடியும்.

இதன் முக்கியம் என்னவென்றால்?

1. மாயா (சூட்சும) சொரூபம் ஸ்ரீ பகவான்.
2. அவன் தனக்கென ஓர் வடிவம் இல்லாதவன்.
3. நீ எந்த வடிவத்தை கொடுக்கிறாயோ, அதை அவன் ஏற்றே ஆக வேண்டும்.
4. அம்மாயையின் "மகனே மனம்!"
5. யோகம் ஜப தபம் என இன்னும் பல வழிகளில் உன் மனதை "கட்டுப்படுத்தாமல்!" "எல்லாம் நீயே!" என சர்வார்ப்பணமாக,



உ

விடுவதே தியாகமாகும். 6. மனதின் எண்ணமே நாமரூப ஜகம். மாயாவின் தோற்றமும் நாமரூப ஜகம். 7. மாயாவின் நாமரூப ஜகத்தை, மாயாவின் மைந்தனிடம், (மனதிடம்) ஒப்படைப்பது தான் முறையாகும்.

கேள்வி:- தாங்கள் சொல்வது, கேட்பதற்கு, இனிமையாகவும், எளிமையாகவும் தான் தோற்றுகிறது. ஆனால், நாமரூப ஜகமோ, "ஜடசொரூபம்"! ஆனால், மாயையின் மனமோ, "சூட்சும சொரூபம்"! ஜடசொரூபத்தை, சூட்சும சொரூபம் எப்படி ஏற்க முடியும்?

பதில்:- நல்ல விளையாட்டுத்தனமான கேள்விதான்! நாமரூப ஜட சொரூபத்தை நீ விடவோ, அம்மனம் அதை ஏற்கவோ முடியாது தான். ஆனால் நாமரூப ஜட சொரூப "கற்பனையின் எண்ணத்தை." "எண்ணத்தான்!" விடலாமே?

கேள்வி:- அது சரி! மன எண்ணமும் சூட்சுமம் தான்! மனமும் சூட்சுமம் தான்! எதை எதனிடம் எப்படி கொடுப்பது? எது எதை எப்படி வாங்கும்? உங்கள் கதை எப்படி இருக்கிறது என்றால்? "மொட்டைத் தலைக்கும், முழங்காலுக்கும்" முடிச்சுப்போடும்நிலை போல் இருக்கிறதே!



உ

பதில்:— நல்ல விகடமான பதில்தான்.
அதையே உன் பதிலாக மாற்றிப்பாரேன்?

கேள்வி:— ஐயா! மொட்டைத்தலையென்றால்,
"முடி" இல்லாதவ! முடியிருந்தால்லவோ,
அம்முடியை காயுக்கு கொண்டு வரமுடியும்?
முடி போடவும் முடியும்!

பதில்:— கொழுந்தே! இருப்பதை இல்லாததனால் அழிக்க
முடியாது. அதேபோல, இல்லாததையும் இருப்பதனால்
தொடவும் முடியாதுதான். ஆனால் உன்கதை அப்படி இல்லையே!

கேள்வி:— புரியவில்லையே!

பதில்:— நாமரூப ஜகம் "ஜடம்" அது அறிவற்றதே!
அதை ஒண்ணும் பண்ண முடியாது! பண்ணவும் கூடாது!
அது உன் வகைக்கு வரவே இல்லை! இது பிரமாண உண்மை!
அந்த ஜடசொரூபத்திற்கு, "மாற்று" பெயரும்,
"மாற்று" உருவமும், அது ஏற்படுத்திக் கொண்டதா? உன் மாயாமனம் உண்டு பண்ணியதா?

கேள்வி:— (ஆழ்ந்து சிந்தித்தான்) ஆமாம்! அறிவற்ற
ஜடசொரூபத்திற்கு, "நான்"! தான் பெயரிட்டேன்.
"எனது"! தான் அது விளங்கப்படுகிறது. அகங்கம்
"என்னுடையதாக"! பாவனை செய்து கொண்டு,
"உண்மை"யும் நான்தான் கொண்டாடுகிறேன்.



உ

பதில்:- இந்த நான் என்றும், என்றவ் என்றும், என்னுடையது என்றும், உரிமை கொண்டாடியது யார்?

கேள்வி:- என்னுடைய மனமே!

பதில்:- உன் மனம் ஜடமா? சூட்சுமமா?

கேள்வி:- என் மனம் சூட்சுமமே!

பதில்:- அப்படியானால், ஜடசொரூப நாமரூப உலகின், அனைத்து "நாமரூபங்களும்", அவைகளின் "குணதிசயங்களும்", உன்னுடைய கற்பனை எண்ணமா? ஜடசொரூப உலகமே தன்னை அப்படி ஆக்கிக் கொண்டு, என்னை இன்ன பெயரிட்டுத்தான் அழைக்க வேண்டும் என்றோ, நான் இப்படித்தான் இருப்பேன், இப்படித்தான் இயங்குவேன் என்றோ, உன்னிடம் சொன்னதா?

கேள்வி:- இல்லையே, அனைத்திற்கும், "என் மன" எண்ணமே காரணம் என உணர முடிகிறது!

பதில்:- அப்படியானால் உன் மாயா மனம் என்ற சூட்சுமத்தால், ஜடசொரூப நாமரூப சூட்சுமத்தை, (மண், மலை, மரம், என்ற நாமத்தை அவைகள் ஏற்கவும் இல்லை, விடவும் தேவையில்லை) (உண்மை:- மனமே நாமரூப குணதிசயங்களை கற்பனையாக" கொடுத்தது!)

அப்படியானால் அவைகளை உன் மனமே அழிக்க முடியுமா? அழிக்க முடியாதா?

இதற்கு இறைவனும் பொறுப்பல்ல! வேறு எவரும் பொறுப்பல்ல!



உ

இறைவனும் இதை ஏன் இப்படி மாற்றினாய்
என, உன்னிடம் சண்டைக்கும் வரமாட்டான்.
ஏன் இதை இப்படி அழிக்கிறாய் எனவும்,
உன்னோடு வாதிடவும் மாட்டான். இது
அவனுடைய, ராஜ்யமாக இருந்தாலும்,
அவன் குழந்தையாகிய உன்னுடைய,
ராஜ்யமும் தான். அவனே நீ நீயே அவன்!

கேள்வி:— நீங்கள் சொல்வதற்கும், யாம் கேட்பதற்கும்,
நன்றாகத்தான் இருக்கிறது. ஆனால் பாழாய்ப் போன இந்த
மனம் கேட்க வேண்டுமே? அவ்வாறு ஏற்க வேண்டுமே?

பதில்:— உன் மனதைத்தான் சொல்கிறாயா? ஊரார்
மனதையும் சேர்த்து சொல்கிறாயா?

கேள்வி:— எம் மனம் பூரணமாக நம்புகிறது. ஆனால் ஊரார்
என்ற உறவுகள் ஏற்க வேண்டுமே?

பதில்:— நீ உனக்காக வாழ்கிறாயா? உறவுக்காக வாழ்கிறாயா?

கேள்வி:— எமக்காகவே யாம் வாழ்கிறோம்.

பதில்:— அப்படி யானால், ஊராரைப் பற்றிய கவலை உனக்கு எதற்கு?
ஊர் **வாழ்ந்தாலும் தூற்றும்!** நீ
இல்லாது **தாழ்ந்தாலும் தூற்றும்!!**
இது சகஜம் தானே? ஆனால் ஓர் ரகஸ்யம் என்னவென்றால்?
ஊரார் உறவுகளின் மான ஈன வார்த்தைகளை மறந்து, நீ
கொஞ்சம் விலகினாலும், அவர்கள்&அவைகள், உன்னை முழுமை
யாக மறந்து விடுவார்கள். காலக்கிரமத்தில், உலக நாமமேயும்
அனைத்தும் ஓர் "**பொம்மலாட்டம்**" என அறிவாய்!
இதைத்தான் யாம் முன்பே சொன்னோம்.



சூட்சுமமான மனதால், அதன் கற்பனையான நாமரூப குணக்கிரியை சூட்சுமத்தை, அழிக்க முடியும் என்றோம்! ஒன்று இருந்தும், ஒன்று இல்லாதிருந்தால், இது முடியாத காரியமே! இரண்டும் (மனமும், நாமரூப குணக்கிரியைகளும்) இல்லாததே! அதாவது, "கற்பனைசொரூபங்களே"!

கேள்வி:— தியாகம் சிறந்தது என சொல்ல வந்தீர்கள். சாதனையும் தேவையில்லை என்றும் சொல்ல வந்தீர்கள். ஆனால் விளக்கம், வேறு நிலைக்கு சென்று சில ரகசியங்களை இரசித்துக் கொண்டோம்! முந்தைய உங்கள் வாசகத்தில் மனக்கட்டுப்பாட்டை விட, மனதை இயல்பாக விடுவதே, சிறந்த மார்க்கம் என சொன்னீர்களே! அது எப்படி சாத்தியமாகும்? தியானம் என்றும் யோகம் என்றும், இன்னும் பல கட்டுப்பாடுகளுக்கு அடங்காத மனம், இயல்பாக அதன் போக்கில் விட்டு விட்டால் மனம் மனமாக இராது.

பதில்:— (சிரித்துக் கொண்டே) மனம் எதுவாக இருக்கும்?

கேள்வி:— அனுபவம் பெற்ற மகான்கள், மனதை குரங்கு என்றும், மதயானை என்றும், முரட்டுமாடு என்றும், குறிப்பிடும் போது, இவைகளை அழிக்கவோ அடக்கவோ அவசியம் ஓர் கட்டுப்பாடு வேண்டும்.

பதில்:— நல்ல உதாரணங்களையே கொடுத்தாய். அவைகளை அடக்கும் விதத்தையும், ஸ்ரீமகான்கள் சொன்னார்களே. அவைகளை ஏன் விட்டுவிட்டாய்? குரங்குக்கு "கோல்" என்றும், மதயானைக்கு "அங்குசம்" என்றும், முரட்டு மாட்டிற்கு "மூக்கு" கயிறு என்றும் சொன்னதை மறந்து விட்டாயா?



ஓ

ஓர் உண்மையை உணர். குரங்கு மரத்திற்கு
மரம் தாவும் எதையும் நாசம் செய்யும் ஆனால்
ஓர் "கோல்" இருந்தால் அது அடங்கும்.
மதயானை என்பது மதம் பிடித்தால் மட்டும்,
அதுவும் சர்வ நாசம் செய்யும். அதை அடக்க
"அங்குசம்" இருந்தால் போதும்.
இவ்விரண்டுமே சர்வ சாதாரண நிலையாகும். ஆனால்
"முரட்டுமாடு" என்பதற்கு மூக்குக்கயிறு
அவஸ்யம் தேவை!
இதைக் கவனி:- 1. மாடு மேய்ப்பவன் "ரக்கு"
ஆகும். ஆகவே எம் கர்த்தர் சொன்னார், அனுபவ வாசகமாக:-
"யாமே நல்ல மேய்ப்பன்"
என்றார். இவரிடம் மனம் இல்லை. அவர் "அறிவு"
தம்மிடம் உள்ள
சொரூபமானவர். இவர் ↑ இறையாற்றல் அனுப்பிரமாணமும்
வெளிக்காட்டாமல், தம் உள் அடக்கியவர். இவருக்கு மனம்
இல்லாத தன்மையினால், இவர் அறிவானது, இறையாற்றலாக
இவர் அறியாமலேயே, "ஜீவ அழிப்பின்"
நிமித்தம் வெளிப்படும். இவர் இயக்கம் அற்ற, பர சொரூபமாக
இருப்பதால், இயக்கம் உள்ள இறை சொரூபமாக இயங்குவது,
"மஹாரகஸ்யமாகவே" இருக்கும்!
(இதை மனம் படைத்தவராலும் காண முடியாது.)



"பரகுணியாக" இருந்து கொண்டு, இறை சொரூபமாக இயங்க முடியும் "யோகமாயாவை" தமக்குள் அடக்கி இருப்பதால் எந்த வலிமையும் தோற்றுமல் இருப்பவர்.

உ. மூக்குக்கயிறு :- இது அந்த மாட்டின், ("சிஷ்யனின்") ஞானேந்திரியங்கள் ஐந்தையும் (கண், காது, மூக்கு, வாய், "தோல்") இணைத்த ஓர் மூக்கணாங் கயிறு ஆகும். அக்கயிற்றில் இணைந்த ஓர், "நாமான" கயிறு ஒன்றை, ஓர் முனியை மூக்குக் கயிற்றிலும், ஓர் முனியை தம் அபய கரத்திலும் பற்றி இருப்பார். கயிற்றின் நீளம் என்பது, "பிராரப்த" கர்மாவும், அறியாமையினால் செய்யத்தாண்டும், அப்போது நிகழும், "ஆகாமிய" கர்மாவும் இணைந்ததே; எட்டமட்டும் சேயும், மாட்டின் இணைப்புக் கயிறாகும். இக்கயிற்றை ஸ்ரீ ஸத்குரு பிடித்திருந்தாலும், அதன் இயக்கம் இறைவனுடையதாகும். காரணம், இவ்வுலகமும் அதன் பொருள்களும் அவனுடையதாகும். அந்த சிஷ்யனின் (மாட்டின்)



2. ........

வினை அறிந்து, தேவையை கொடுக்கவும், தேவையற்றதை விலக்கவும் "சாட்சியாகிய" இறைவனுக்கே தான் தெரியும். காரணம் "செயலற்றவர்" இறைவன். "செயலற்றவர்" ஸ்ரீ ஸத்குருவாகும்!

3. முரட்டுமாடு:— ஸத்சிஷ்யன் என்ற "மாயா, மன, குணதோஷம்" ஆகும். இம் மனதின் தன்மை, எப்படி இருக்கும் என்றால்? கர்மா சம்பந்த பழக்க வாஸனையால், "மண், பொன், பெண்ணின்" இம்மூன்றிலும், நிறைவுபெறும் தன்மையிலும், ஆசை வசப்பட்ட மனதின் தன்மையினும் தவறி இடறி நிலை தடுமாறும் போது, (பசும்புல்லும், ருசியான உணவும், அருகில் இருக்க, அதை உண்டுகொண்டிருந்தாலும்) "பிற ஜீவனின்" மோஹ போஹத்தை, மனம் கண்டு எண்ணும் போது, "தூரத்துப் பச்சை கண்ணுக்கு குளிர்ச்சி" என்பது போல்,



"ஸ்ரீமுராரி"!! ஒரு அந்த முரட்டுமாட்டின் "அடங்காமையை"! தம் அபய கரத்தில் தாங்கிய கயிற்றை, மெதுவாக "ஓர் சுண்டு சுண்டி"/ இழுத்து "தற்காலிக ஓர் வேதனையை"/ கொடுத்து, தம்மோடு அணைத்துக் கொண்டு, நிரந்தர "ஸௌக்யமான"! சுகத்தை, கொடுப்பவர்தான் ஸ்ரீ குருதேவராகும்!

தற்காலிக ஓர் வேதனை :— பொருளோ தொழிலோ உறவோ ஏதோ ஒன்று கிட்டாநிலைக்கு இருக்கும் போது, கிட்டும் நிலைக்கு உன்னுடைய கரும் ஆசையால், அதை நெருங்கும் போது, அதை விலகச் செய்தோ அல்லது உன்னை துன்பத்தில் ஆழ்த்தியோ, அல்லது அதை "இழக்கச்" செய்தோ, ஓர் "நலம்" செய்வதாகும். அது உன் பாசப் பிணைப்பால், துன்ப வேதனையாகத் தோன்றும்!



உ

சாஸ்வதமான சுகம்:— "வினைகழியு மிடமாகவும்" இருக்கலாம். எதிர்பாராத வினைத் தொடர்பிலிருந்து (முழுக்க "வாழ்க்கையின்" வினையிலிருந்து) உன்னை விலக்கலாம். அல்லது யோகமாயாவை பயன்படுத்தி, உன் வினையை நெருக்கித்தள்ளி கழிக்கலாம். இப்படி பலநிலைகளிலிருந்து உனக்கு சாஸ்வத சுகத்தை கொடுக்க அந்த "கருணையின்" பிரவாகம் உன்னை ஆட்படுத்துவாரம்.

கேள்வி:— ஐயா! தாங்கள் சொல்லிய, இவ்வுவமான கதை, வெகு வெகு பொருத்தமானதே! இதில் யோகத்தை விட தியாகம் சிறந்தது என்பதற்கும். இயல்பாக மனதை விடவேண்டும், கட்டுப்பாடு தேவையில்லை யென்பதற்கும். "விடை" இதிலேயே இருப்பதாக உணர்கிறேன்.

பதில்:— நுட்ப அறிவு படைத்த குழந்தாய்! எங்கே நீ உணர்ந்ததை, சற்று தெளிவாக சொல்பார்ப்போம். யோகத்தை விட தியாகம் சிறந்தது என்பதை, எப்படி உன்னால் விளக்க முடியும் சொல்பார்ப்போம்?



உ

கேள்வி:— ஐயா! ஒரு பக்குவ ஆன்மாவுக்கு பூர்வ புண்ணியத்தால் "ஸத்குரு" கிடைத்துவிட்டால் போதும். அவரே "இறைவனும்" "ஸத்குருவும்" ஆகிவிடுகிறார் என்பதே பிரத்தியக்ஷ உண்மையாகும்! அவரையே முழுமையாக, எந்தவித கேள்வியும் இல்லாமல், "சந்தேகமும்" இல்லாமல், பரிபூரணமாக "எல்லாம் நீயே" என சரண் அடைந்துவிட்டால், அதுவே "ஸர்வ சங்கல்ப பரித்தியாகம்" ஆகும். அந்த தியாகத்தைவிட, யோகம் சிறந்ததாக எமக்குப் படவில்லை. காரணம் இவரே "மறைமுக" இறையாற்றலுடன் விளங்குவதால், பக்தியோ, உபாசனையோ தனியே தேவையில்லை. யோகத்தில் சுவாசத்தை கட்டுப்படுத்தி, ஆறு ஆதாரங்களையும் தாண்டி, பிரம்மரந்திரம், அதாவது "சகஸ்ராரம்" வரை செல்லும் பேறு.



உ

நம் உடலில் இயக்கும், 96 தேவர்களை
யும், எதிர்த்து போரிட்டு, அவர்களை வெல்ல
வேண்டும். இங்கு "எல்லாம் நீயே" என,
ஸ்ரீகுருதேவரை சரண் புகுந்து விட்டால்,
அவரே இறைசொரூபமாகவும், குருசொரூ
பமாகவும், விளங்குவதால், மேலே
கூறிய 96 தேவர்களையும் எல்லாம் நீயே என்ற
அந்த மந்திரமானது, அவர்களிடம் நாம் எதிர்க்காமல் அவர்களை
"பணியும்" நிலை தானே கூடி விடுகிறது. அவர்களி
டமும் நாம் பணிந்து விட்டால் அவர்கள் நம்மை எதிர்
க்காமல், அனுகூலமாக இருப்பார்கள். இது ஓர் பெரிய
வரப்பிரசாதம் ஆகிவிடுகிறது. ஸ்ரீ ஸத்குரு கிருபையால்,
"ஒழுக்கத்தின்" அடிப்படையில், இயல்பாகவே
"ஆசைகள்" வரவர குறைந்து மட்டுப்பட்டு முடி
வில், ஆசைகள் இல்லாமலேயே அழிந்து விடுகிறது. யோகத்
தில் போராட்டம் செய்து, ஆசைகளை வெல்ல வேண்டும். தியாகத்
தில் எந்த போராட்டமும் இல்லாமல், மனதோடு உறவாடி, அம்மன
தை இறையென்று குருவிடம், ஒப்படைக்க தன்மையினால்,
"மாயையிடமே மனதை" இயல்பாக
விரும்பி ஏற்பட்டு விடுகிறது. இந்த மாயா மனதை,



வெல்வது தானே "அழிப்பது" தானே
அதாவது "மனத்தாக்குது" தானே) நம் சாதனை. அதனால் நாம் இங்கு எந்த சாதனையும் செய்வதாக எமக்குப் படவில்லை! காரணம்? "எல்லாம் நீயே!" என்ற சர்வார்ப்பண மந்திரத்தில், நாம் "அடங்கி" இருப்பதால், எவரையும், எதையும் "அடக்கும்!" சாதனை அவசியம் இல்லாமல் போய் விடுவதால், இது எந்த சாதனையும் இல்லவே இல்லை! அதே நேரம் இயல்பாகவே மனதை விடவும் செய்கிறோம்!

இயல்பாக மனதை விடுவது :— எதையும் வேண்டாம் என்றும், கூடாது என்றும், மாட்டேன் என்றும், பலவந்தத்தால் "நிராகரணம்!" செய்தால், அதன் வலிமையை, ("பலத்தை") அது காட்டுவது இயல்புதானே? பணியாததை என்றும், கும்பிட்ட கரங்களுக்கு வெட்டில்லை, என்றும், தாழ்ந்து நின்றால் வாழ்ந்து நிற்பாய், என்றும் ஸ்ரீமஹான்கள் கூறும் "பணிவின்



உ

மஹத்வம், பணிவு உள்ளவர்களுக்குத்தான் தெரியுமேயன்றி, பணிய மறுத்தவர்களுக்கு ஒருகாலும் தெரிய மார்க்கம் இல்லை. இதுகலியுகமாக இருப்பதால், பணிவு என்பதே ஓர் "இயலாத்தன்மையாக"! இன்றைய நிலையில் காணப்படுகிறது. காணப்படவும் செய்யும். ஆகவே நம்மனதை கட்டுப்பாடு செய்யும் போது, எப்படி எப்படியெல்லாம், அது நம்மோடு போராடவேண்டுமோ, அவ்வாறெல்லாம் போரிட்டு அது நம்மை துவம்சம் செய்யும். அதே மனதை, சாந்தியாக, அமைதியாக, பொறுமையாக, "இறை குரு" சிந்தனையில் ஒன்றுபடுத்தி அம்மனதை, "நடப்பதெல்லாம் நலமே!!!"

என நலத்தையே போதித்தால், அம்மனம் நலமாகவே மாறிவிடும். இறை குரு சிந்தனையில் எல்லாம் நீயே என இயல்பாக இருப்பது, சும்மா இருப்பதாகும் "சாதனையும்" அல்ல! "கட்டுப்பாடும்" அல்ல! மனோநலமும், ஆத்ம சுகமும், எந்த சாதனையாலும் பெறுவதல்ல. என்பதை நாங்கள் கருணையான திருவையாறில், உணர்ந்து பெற்றோம். இதற்கு உதாரணம்

"சொல் அற சும்மா இருப்பதுவே சுகம் ஆகும்!!!"



பதில்:- குழந்தாய்! இந்த தெளிவாகவும், அனுபவ நிலையிலும், இந்த "மெய்யுணர்வு"! உனக்கு எவ்வாறு வந்தது?

கேள்வி:- ஐயா! ஐயா! ஐயா! எமக்கு வந்ததா? யாமா பேசினோம். இவ்வளவு வேளையில் தாங்களே எம்முள் இருந்து, இத்தனையும் சொன்னீர்கள். எமக்கு ஏது? ஐயா! யோகம், பயிற்சி யோகம், என இன்றைய கலியுகத்தில், செய்கிறார்களே? அதன் விபரம் எமக்கு விளங்கவில்லை. அதை தாங்கள் சற்று விளக்கினால் நல்லது.

பதில்:- குழந்தாய்! யோகம் என்பது, "வாயு" பயிற்சியாகும். இந்த வாயு பயிற்சியால், மனதின் "எண்ணங்கள்"! குறைந்து குறைந்து மனம் அமைதி பெறும். இங்கு மனம் அடங்கும். நீ எத்தனை ஆண்டு காலம், இப்பயிற்சியை தொடர்ந்து செய்கிறாயோ, அத்தனை வருடம் உன் மனம் எண்ணமற்றிருக்கும். மனம் அடங்கி இருக்கும். அந்த சுவாசப் பயிற்சியின் "இயலாத் தன்மை"! வரும்போது, (வயதான காலத்தில்) மனம் எங்கு அடங்கியதோ, அங்கிருந்து திரும்பவும் எகிறிக் குதித்து விளையாடும். இது இயல்பே வயது முதிர்ச்சியாலே!



உன் உடல் சோர்ந்து போவது இயல்பே! ஆனால் உன் மனம் என்றென்றும் "**இளமையே!**" அம்மனதிற்கு, மூப்போ, மரணமோ இல்லவே இல்லை. ஆனால் மனம் அழியும் என, யாம் சொல்வது "**மனம்மறைந்த ஏகம்நிலையாகும்!**"


இந்த யோகம் நீ பண்ணாமல், நீ முன்பு கூறியபடி, "**தியாகம்!**" மட்டும் செய்வாயானால், உன் தியாக உணர்வினால், எல்லாம் நீயே! என அர்ப்பணம் செய்த தன்மையினால், மனம் அது பிறந்த இடமாகிய, "**மாயையில்!**" தானே சென்று கரைந்து, கலந்து, மெய்யாகி விடுகிறது. மனம் மாயையில் கலந்து மெய்யானால், மாயை அதனுடைய இருப்பிடமாகிய, ஸ்ரீ பகவானுடன் மறைந்து விடும். அங்கு உன் உபாசனா மூர்த்தியாகிய, ஸ்ரீ பகவானும் நீயும், ஒன்றே என்ற மெய்யுணர்வினால்! "**தத்வம்-அஸி!**" என்ற பரவுணர்வினால், அதுவே நீ நீயே அது என்ற நிலை பெற முடியும். இதனால் நீ உணர்வதெல்லாம்?

சுவாசப் பயிற்சியினால் (யோகத்தினால்) மனம் அடங்கும்! இயல்புத்தன்மையால் திரும்ப எழும்.



"தியாக உணர்வினால்"
ஸ்ரீ பகவானிடம் எல்லாம் நீயே என்ற சர்வ சமர்ப்பணத்தால்,
"அவன் கருணையினால்!"
எல்லாம் அவன் பொருள் என்றும், எல்லாம் அவன் செயல் என்றும்
"அவனிடம் விட்ட தன்மையினால்!" அனைத்து
ஆசைகளும் அழியும். மனதின் பிடிப்பு ஆசையே!
ஆசை அழிந்தால், மனம் இருக்க இடம் ஏது???
மனம் அடங்க வேண்டுமானால் "யோகம்" பண்ணுவோம்.
மனம் அழிய வேண்டுமானால் "தியாகம்" செய்வோம்.
இதுவே "சாதனையை" விடுவதே "சாதனை"!
ஆகும். இனி உனக்கு "ஜீவன் முக்தி"யின்! தருகிறோம்
லக்ஷணங்கள் சிலவற்றை, கவனமாக கேட்பாயாக.
அவைகள் அனைத்தும் "கற்பனைகள்"!
அவை அனைத்தும் "ஸ்வய அனுபவம்"!
ஆகும். ஆனால் நீ ஓர், ஸந்தான குழந்தையாக இருப்பதனால், அனுபவம் பெற்று, ஜீவன் முக்தனாய் என ஆசி கூறி ஜீவன் முக்தன் லக்ஷணத்தை உரைக்கிறோம் உணர்க.





1. "வினை" (உடல்) வினை சம்பந்தத்தால் ஆடும். "மனம்" (எண்ணமும் கற்பனையும்) அதை ஆட்டும். அங்கு "வாக்கு" விபரீத படுவதால், வினை பெருகிறது. இதன் மூல காரணம் "புற் கவன சக்தியே!" (பிறர் மேல் கவனம் வைப்பதே) காரணமாய் அமைகிறது. ஆனால் இங்கு "தற்கவன சக்தி!" அதாவது எல்லாம் இறைவன் பொருளே, எல்லாம் இறைவன் செயலே, நாம் இறைவன் குழந்தையே, நாம் ஆத்மா என்ற பர சொரூபமே என்ற, "மெய் உணர்வு" குன்றாமல் இருந்தால், வினை உடல் பழையனமட்டும் அனுபவிக்கும். மனமும் சாந்தியுறும். வாக்கும் நம்முள் அடங்கும். புற்கவன சக்தி தோன்றாது மறையும். அங்கு வினை பெருகா தன்மையினால், நாம் ஜீவன் முக்தனே!



உ. "தாய்" ஆனவள் "தந்தை"யைக் காட்டுகிறாள். தந்தையானவர் "குரு"வைக் காட்டுகிறார். குருவானவர் "தெய்வத்தை" உணர்த்துகிறார். "பூர்வ புண்ணியம்" விசேஷமாக இருந்தால், தெய்வமே "ஸத்குருவை" காட்டும். அல்லது, தானே ஸத்குருவாய் வரும். அந்த ஸத்குருவானவர் "ஜகத், ஜீவ, ஈஸ்வராதி"களின் "நாம, ரூப, குண" தோஷங்கள் அனைத்தும், உன் மனோமய கற்பனையேயன்றி உண்மையில் எவையும் இல்லையென உணர்த்தி, ஒன்றைப் பார்த்தால் ஒன்றில்லை என்னும் உண்மையை, அறிவுபூர்வமாக உணர்த்தி (பரமாக பார்த்தால் பார் முதல் பூதம் இல்லை, பார் முதல் பூதமாக பார்த்தால் பரம் இல்லையென்று) சுத்த அத்வைதத்தை, "வாய்" ஞானமில்லாமல் "அனுபவ" ஞானத்தை ஸ்தாபித்து, "அதுவே நீ; நீயே அது" என்ற பரிபூரணத்தை உணர்த்திவிட்டால், நாம் ஜீவன் முக்தனே!



# ௩. உ

எங்கும், எதிலும், எந்நிலையிலும், எவரிடத்தும், எக்காரணம் கொண்டும், "குற்றங்குறை!" காணாமையும்; படித்தவன், படியாதவன், உயர்ந்தவன், தாழ்ந்தவன், பக்தன், பாமரன், ஞானி, அஞ்ஞானி, யெனப் "பேதம்!" காணாமையும்; இது வேண்டும், இது வேண்டாம், என்ற "விருப்பு வெறுப்பு!" கொள்ளாமையும்; ஆத்திரம், அவசரம், வேகம், ஆவேசம், படபடப்பு, சந்தேகம், பயம் முதலிய "கலக்கணம்!" இல்லாமையும், பொறுமை, அன்பு, கருணை, நம்பிக்கை, திடவைராக்கியம், ஸத்குரு வாக்கியார்த்த சிரத்தை, கொண்டு ஆரம்பசாதனையில், இறை நம்பிக்கையில் "நாம் அவன் குழந்தையே!" என்றும், சாதனையின் முதிர்ச்சியில் ஸத்குரு வாக்கிய நிலையில், ஜகத் ஜீவ ஈஸ்வராதிகளின் "நாமரூபத்தை!" சிப்பியின் வெள்ளியென முழுமையாக அழித்த நிலையின், பூரணப் பொலிவுடன், "நாம் அது. அதுவே நாம்!" என்ற பர உணர்வை பெற்றுவிட்டால், அந்த க்ஷணமே நாம் ஜீவன் முக்தனே!



# 4. உ

வந்து, இருந்து, மாறி, மறைவது, "நாமரூப ஜக" சொரூபமாகும். ஆனால் நமக்கு தோற்றமோ, மாற்றமோ, மறைவோ "முக்காலமும்" இல்லவே இல்லையென்றும். யாம் "அசங்கன்" யாம் "சேதனன்" யாம் "நிர்விகாரி" யாம் "நிர்குணன்" யாம் காலாதீத "பராசொரூபம்" என்றிட உணர்வு பெற்று, வினை விதி வசத்தால் வந்த, உறவோ, தொழிலோ, பணமோ வசதிகளோ, "நஷ்டம்" "கஷ்டம்", ஆனாலும், "பேரிழப்பு" ஆனாலும், இது நானும் அல்ல, நம்முடையதும் அல்ல, இது அவித்தைக்கும், மாயைக்கும் நடைபெறும், ஓர் மாயா ஜால விளையாட்டு என்று முடிந்த முடிவுடன், "கண்" இருந்தும் குருடனாய், "காது" இருந்தும் செவிடனாய், "வாய்" இருந்தும் ஊமையாய், மஹா மௌன நிலையில், பிரம்மானந்தத்தில் சர்வ சதா லயித்திருப்பவனே, ஜீவன் முக்தன்!



# ௫. உ

அனைத்தும் ஸ்ரீ பகவான் சிருஷ்டி!
அனைத்தும் ஸ்ரீ பகவான் செயல்! ஆனால்
அச்செயல் அனைத்தும், இச்ஜீவர்களின்
"புண்ணிய பாவங்களுக்கு" ஏற்ப, பாரபக்ஷ தோஷம் இல்லாமல், விகிதாச்சாரப்படி கொடுக்கப்பட்டும், இயக்கப்பட்டும் வருகிறது. ஆனால் மனம் படைத்த இம் மனிதன் மட்டும், "மனம் வசம்!" அகப்பட்டுக் கொண்டதன்மையினால் நான், நான், என அடித்துக் கொண்டு, அல்லலுறுகிறான். இவன் வீணான மனகற்பனையை விட்டுவிட்டு "தனக்கென அமைப்பதும், கிடைப்பதும்," இயல்பாகவே இவனுக்கு "நடப்பதும்." அது நமக்கென, நம் இறைவனால் நடைபெறும் "கருணை"யென, அமைதியாக ஏற்றுக் கொண்டு கவக்கம், பயம், சந்தேகம், இவைகளை விட்டுவிட்டு, ஸ்ரீ ஸத்குருவின் ஸத்திய வாசகப்படி, "நாமரூபத்தில்" எந்தபிடிப்பும் இல்லாமல், எல்லாம் "மண்ணே!" என்றும் அவை தூசியாகிய ஆன்மசொருபமே என உணர்ந்து, "அதுவே நாம், நாமே அது" என்ற பரசொரூபஸ்திதியில் இருந்தால் அவனே ஜீவன் முக்தன்! தி



# 6. உ

வார்த்தைக்கு வார்த்தை, எதிர் வார்த்தை
பேசாமலும், நம் நடையில் "நாம்
அடங்கி" இருந்து கொண்டு,
பிறருடைய, நடை, உடை, பாவனையை,
கண்டு கொள்ளாமலும், கண்டிக்காமலும், கண்
காணிக்காமலும், அவரவர் "வினை, மனம்"
இவைகளின் இயக்கப்படி, அவர்கள் நடக்கிறார்கள் என்றும்,
"நம் வினை சம்பந்தப்படி" அவர்
களுக்கும், சொல்வாரோ, செய்வாரோ, ஓர் காரியம்
நடைபெற்றால், அங்கு "பொறுமையும்,
நிதானமும்" இவைகளுடன், "இறை
குரு உணர்வை" நாம் நம் மட்டில்
ஏற்றுக்கொண்டு, ஆத்திரம், ஆவேசத்துடன், எந்த
குற்ற உணர்வும் இல்லாமல், வினைப் பற்று வரவு
ஒழுங்காக கழிகிறதென, சாந்தியாக நாம் உணர்
ந்தால், அந்நிலையில் ஓர் ஆனந்தம், அவஸ்யம்
நமக்குத் தோற்றும். அந்நிலையே, "சாட்சி" நிலை
ஆகும். அது இறை கருணையைப் பெற்ற நிலையாகும். அந்
நிலை பெற்றவே, அகண்ட பாவனையென்ற, சர்வ சாட்சி நிலை
தானே சித்திக்கும். இந்த சர்வ சாட்சி நிலை பயிற்சியும்
முயற்சியும் இல்லாமல், வெறும் ஓர் மறக்காகும்.
இதுவே ஜீவன் முக்தியாகும்.



## 7. உ......

"காண்பவனை இரு!"
காணும் "காட்சி" பொருளாகாதே!

"கேட்பவனை இரு!"
கேட்கும் "ஒலியின்" "அர்த்த அனர்த்த" பாவனையாக இராதே!

"பேசுபவனை இரு!" இறைபர சொரூப "ஒலியில்" ஒன்றிக் கலந்து மறைந்தவனை இரு.
"நாமரூப ஜக ரூப விளக்கமாக இராதே!

"சுவைப்பவனை இரு! சுவைக்கும் பொருளாகாதே!"

சுவைப்பவன்:- எல்லாம் ஒன்றே! அது சுக சொரூபமே! அதுயாமே! என்ற சுவையை எந்த விநாடியும் ஸ்வய அனுபவம் உடையவன்.

சுவைக்கும் பொருள்:- உடல், உலக, நாமரூப ஜகத்தை, இன்பதுன்பமாக எண்ணும் ஜனனமரண "பழம்"!

"தொடுபவனை இரு!" தொடும் பொருளாக இராதே.

இறைகுரு உணர்வோடு இருப்பது அந்த ஒன்றை தொட்டநிலை. சொந்த பந்தபாச உணர்ச்சிகள் ஜனனமரணத்தை தொடும் பொருளாகும்! இவ்வைந்தையும் பெற்றவனே ஜீவன் முக்தன்!



# 8. எந்த 'கர்மாவிலும்'!

ஆத்ம ஞானம் பெறமுடியாது! ஆனால்?

கர்மா 'முடிந்தாலன்றி'!

ஆத்ம ஞானம் பெறமுடியாது!

எந்தகர்மாவிலும் :— நிஷ்காமிய கர்மா! பக்தி! பூஜை! புனஸ்காரம்! ஆச்சாரம்! அனுஷ்டானம்! விதி முறை கட்டுப்பாடு! யோகம்! மந்திர, தந்திர, எந்திர முறைகள்! சித்திகள்! இன்னமும் பல பல 'விதி' முறைகள்! இவைகளைவிட்டுவிட்டு ஆனால்???

## 'சும்மா இருப்பதுவே சுகம்!!'

(இதுவே ஆத்ம ஞானம்)

மேலே கூறிய அனைத்தையும் விடவேண்டுமானால்? அவை அனைத்தும் 'நாம் ஆக வேண்டும்!'

அனைத்தும் நாம் ஆனால், செய்பவனும் இல்லை! செய்விப்பவனும் இல்லை! செய்யும் கர்மாவும் இல்லையென ஆக வேண்டும்! அந்நிலைபெற, நமக்கன்னியம் எவையும் இல்லையென்ற, 'பூரணநிலை!' அதாவது அது நாமே, நாமே அது என்ற நம்யதார்த்த சொரூபத்தில் மனம் கரைந்து மறைந்தானால், அதுவே ஜீவன் முக்தி!



# 9. உ

கர்மா முடிந்தாலன்றி:— கர்மாவானது இயல்பாக நடைபெற வேண்டும்! நான், என்னால், என்னுடையது என, "அழுத்தமாக" மன நடைபெற கூடாது!

அங்கு மன எண்ணம் எப்படி இருக்க வேண்டுமென்றால்? உடல் உலக நாமரூபம், "சூட்சும" கற்பனை நாமரூபம் இறைவனுடையது. அவை அனைத்தும் விதிக்கப்பட்ட ஓர் விதி! என முடிந்த முடிவாக மனதில் கொண்டு, அந்த உடல் உலக நாமரூபமோ, சூட்சும கற்பனை இறை நாமரூபமோ, "நாமும் அல்ல, நம்முடையதும் அல்ல"!! அவை வந்து, இருந்து, மாறி மறையக் கூடியது. நாம் மாற்றமோ, மறைவோ இல்லாத சுத்த சைதன்யமே என, நாமரூபமின்மையும், விழிகண் குருடு போல, மன "எச்சில்" இல்லாமல் தாவம் இயல்பான கர்மாவில் ஈடுபட்டால், கர்மா இயல்பாக நடந்து முடிவுறும். மனம் எச்சில் அற்ற தன்மையில் புதிய ஆகாமிய கர்மா இல்லை. அதுவே ஜீவன் முக்தியாகும்!



# 10. உ

சும்மா இருப்பதுவே சுகம்:— பிராரப்த வினையின்படி தாவம் கர்மா செய்தே ஆக வேண்டும். அங்கு மனம் இல்லையானாலும், கர்மா செய்ய முடியாது நான். அக் கர்மாவின் "**கர்த்தத்துவத்தை**" (கர்த்தத்துவத்தை) (நான் என்றும், என்னுடையது என்ற) "**மனப்பற்றை**" அகற்றிவிட்டு, எல்லாம் நீயே, எல்லாம் உன்னால், எல்லாம் உன்னுடையதே என்ற நிலையில் "**சர்வார்ப்பணமாக**" ஓர் நாமரூபமற்ற இறைவனிடம், விட்டுவிட்டால், கர்மாபலன் நம்மை சாராத தன்மையினால், நாம் சும்மா இருக்கலாமே? "**வாக்கை**" குறைந்தால் நிறுத்த வேண்டாம்; நிறுத்த முடியாது, நிறுத்தக்கூடாது. "**மனம்**" மௌனமாகும் (எண்ணங்கள் குறைந்து குறைந்து தாமே நின்றுவிடும்) மனம் மௌனமானால், காட்சிகளில் எழுச்சியோ, வீழ்ச்சியோ, அவஸ்யம் வராது. காணும் காட்சியில் வாகார விவகாரம் இல்லையானால், உன் வினை உடலோ, அசுஇய நிற்கும் உலகமோ தாமே மறைந்துவிடும். (உடல் உலகம் இல்லை உனக்கு மட்டும் தோற்றாது) வாத தன்மையினால் நீ ஜீவன் முக்தனே. (நீ சும்மா இருக்க முடியும்.)



# 11. உண்மை

இவ்வுலகம் ஓர் விளையாட்டு மைதானம்! அனைத்து பொருள்களும் அனைவருக்குமே! அங்கு என்னுடையது என "உரிமை"யும்! "உடைமையும்"! நீ பாராட்டிடில், புண்ணிய பாப வினைகளை, நீயே வழியில் ஏற்கிறாய்! நம்முடையது என "பண்மை"! பாராட்டிடில், அப்புண்ணிய பாபவினை, இறைவனையே சாரும்! காரணம் அனைத்துமாய் இறைவன் இருப்பதால், உனக்கு வினைத்தொடர்பு இல்லை. பழைய வினை முடியும். புதிய வினை தொடராது. அங்குடன் விளையாட்டு மைதானத்தில், வினை சம்பந்த பொருள்களும், வினையைத் தீர்க்க வந்த "ஜீவர்களும்"! உறவு சுற்றங்களும் பிராரப்தத்தின்படி கொடுத்தால் எடு. எடுத்தால் விடு. அங்கு மனதால் கணக்கு பார்க்காதே. எவரிடமும் கணக்கு கேட்காதே. எல்லாம் "நன்மைக்கே"! என்ற ஓர் எண்ணத்தை மட்டும், வைத்துக்கொண்டு, மற்றும் அனைத்து எண்ணங்களையும், விட்டுவிடு. "நன்மை"! என்ற இந்த ஓர் எண்ணமே, முதலில் வெளிச்சிந்தை துடைக்கும். தெய்வீகத்தோடு பிணைக்கும். பின் இறைகுரு கருணையால், தெய்வீகத்தையும், பரமார்த்திகமாக்கிவிடும். அதுவே ஜீவன்முக்தி!



# 12. உ

# "தந்தது என்னை!"
# "கொண்டது உன்னை!!"

ஒன்றை கொடுக்காமல், ஒன்றை வாங்க முடியாது.

உன்னுடைமை என சொல்லிய, பிற சம்பந்த மனஎண் ணமாகிய, (அறியாமையின் எண்ணங்களை) அதாவது "என்னுடையது" என எண்ணிய, சொல்லிய, அனைத்தையும், அது சம்பந்த மானவமானம், வெட்கம், சூடு, சுரணை, வசை, ஆகிய இவை அனைத்தையும், நிர்மூல மாக "எல்லாம் நீயே" என உன் இறைவனிடம், விட்டு விட்டால், மறுகணம், "அவன்" "உன்னுடைமை" ஆக்கிவிடுவான். அப்படியானால், உடல் உலக "நாமரூப" ஜகம், அவனுடையதாகி விட்டால், ஸ்வயம் ஜோதியாகிய "பர" சொரூபம், உன்னுடையதாகிவிடும். அங்கு நீ வந்த காரியமும் முடிவுறும், வேறு எந்த காரியமும் இல்லாத தன்மையினால், நீ ஜீவன்முக்தனே!



"எல்லாம் நீயே" என்றால், நாம ரூப குண தோஷ சம்பந்த "லிங்"! அகந்தையும் அவனுடைய (இறைவனுடைய) ஆகிவிடும்! "எல்லாம் நலமே" என்றால், குண தோஷ சம்பந்த மனம் செயலற்றதாகிவிடும். அதாவது மனம் மறைந்தாகிவிடும். வினையும் மனமும் இல்லாத தன்மையிறல், "நாம் அதுதானே" இவ்விரண்டிற்கும், எந்த சாதனையும் தேவையில்லை! இங்கு சாட்சி பாவனை ஒன்றே, ஸ்வய அனுபவமாகும். சாட்சி பாவனையென்றாலே, அனைத்தையும் சமமாக, உணரும் நிலையாகும். நாம் சாட்சி பாவனையில் மனம் நிலைத்தாலும், "ஜட வாஸனைகளோ பழக்கவழக்கமோ" பழைய வாஸனைக்கு இருப்பது சகஜமே. இங்கு நாம் ஓர் கருங்கல்லைப் போலும், பட்டமரம் போலும், அசையாமலும், நாசிக்காமலும், இருந்து விட்டால், மனம் மறைந்தான தன்மையில், நாம் ஜீவன் முக்தனே.



# 14

ஒழுக்க நிலையில் நாம் "தர்மத்தை" போற்றி வந்தால், அந்த தர்மம் நம்மை காப்பாற்றும். அது எப்படி என்றால்?

பார்ப்பதிலும், கேட்பதிலும், பேசுவதிலும், தொடுவதிலும், "உணர்ச்சிகளுக்கு" அடிமையாகாமல் "இறைகுரு உணர்வோடு" சர்வ ஜாக்கிரதையாக இருந்தால், ஸ்வசம்ரக்ஷணையாகிய உணவு, உடை, இருப்பிடம், ஆகிய இம்மூன்றும், நிலைகண்டு, இறைபரகருணையால் நம்மை தேடி வரும். அப்படி தேடி வரும் அம்மூன்றும், எந்த "வினையையும்" சாராமல், தேவைக்கு மட்டுமே கிடைக்கும். இவை பரோபகாரம் என்ற நிலையில், ஜகஜீவ நிலையில் தாமே இருக்கும். இதனால் ஓர் ஜீவன் முக்தனுக்கு கொடுக்கும் "தர்மநிலையில்" கொடுத்தவனும் கடைத்தேறுவான். ஓர் ஜீவன் முக்தனுக்கு சேவையும், கொடுத்தவனுக்கு தர்மமும், இருந்து விட்டு, அக்கர்மா மறைந்து விடும். இங்கு நாம் தர்மத்தை போற்றினோம் என்ற எண்ணமும் இவனிடம் இருப்பதில்லை. இவ்வும் மனம் மறந்தான தன்மையால், இவன் ஜீவன் முக்தனே.



# 16 உ

ஸத்ஸங்கத்வே நிஸ்ஸங்கத்வம்!

நிஸ்ஸங்கத்வே நிர்மோஹத்வம்!

நிர்மோஹத்வே நிஷ்சலதத்துவம்!

அத்வைதம்
என்றுவே
எல்லாம் ஒன்றே
அதுவே நாம்!
நாமே அது!
என்ற பரிபூரணம்

நிஷ்சலதத்துவமே "ஜீவன்முக்தி"

என்றார் ஜகத்குரு ஸ்ரீ சங்கர பகவத்பாதாள்!!!

அதாவது? சுத்த அத்வைத ஞானம் உணர்த்துவதே ஸத்ஸங்கமாகும்.

அத்வைத உணர்வு பெறுவதே நிஸ்ஸங்கமாகும்!

அத்வைத உணர்வு பெற்றுவிட்டால் "மோஹாவேசம்!" இல்லாதொழியும். அத்வைத ஞானத்தால் மோஹம் ஒழிந்துவிட்டால், "நிச்சலம்!" (அசைவற்ற நிலை) என்ற, மனம் அழியும் நிலை. அதாவது மனம் மறந்தாகும் நிலை, தானே சித்திக்கும்! இவை அனைத்தும் "ஸத்குரு!" கிருபா கடாக்ஷத்தாலேயே ஸாத்தியமாகும்.

ஸத்குரு க்ருபை பெற்றுவிட்டாலே, நீயே ஜீவன்முக்தன்!

(ஸத்குரு கிருபை இல்லாமல் ஜீவன்முக்தி பெறமுடியாது)



# 16. உ

"புகழ்" "பட்டம்", "பெயர்", "பதவி", "பணம்", "பெண்", "மண்" இவைகளின் ஆசை வருவது, கலி தோஷமாகிய "போட்டி"யும், "பொறாமை"யும் ஆகும்! மேலே கூறிய இவைகளில் சிக்காத எந்த கலியுக மஹான்களும் இதுவரை இல்லை. இதன் மூல காரணம் அபிவிருத்தி என்ற "பிரவர்த்தி" ஆகும். மண்ணும் பணமும் அபிவிருத்தியின், மூலதனமாகும். மேலும் மேலும், சேவை செய்ய வேண்டும் என்ற "பிரவர்த்தியின்" எண்ணம்தான், வருமேயன்றி, "நிவர்த்தி"யை பின்பற்றி, நாம் வந்த காரியத்தை முடிக்க வேண்டுமென்ற ஜீவன் முக்தியை மறந்து, சொந்த காரியத்தில் முழுமையாக இறங்கி, மேலும் மேலும் வினைகளைத் தேடிக் கொள்கிறார்கள். இது இவர்களின் பெருமையில்லை. இது கலியின் பெருமை ஆகும். இதை இவர்கள் அறியார். ஆதலால் யாம் அறிவோம். முழுமையாக "பிரவர்த்தியை விட்டுவிட்டு "நிவர்த்தியை" ஏற்றுக் கொண்டால், அதுவே ஜீவன் முக்தியே!



உ

இதுவரை ஜீவன் முக்தன் லக்ஷணமாக,
பதிமூறு விளக்கம் தந்தோம். அவைகளை
"சிரத்தையுடன்" ஏற்றுக்
கொண்டு, அனுபவம் பெறுவாயாக.

"துவைதம்" "விசிஷ்டாத்வைதம்"
"அத்வைதம்" இவை மூன்றிற்கும், ஓர் சிறிய
விளக்கம் தந்து, இவ்விதழை முடிக்கிறோம்.

"தந்தை"யும் "தனயனும்" இணைந்த நிலையில்,
இருவர் என்பதால் துவைதம். இங்கு அப்பா அப்பாதான்.
பிள்ளை பிள்ளைதான். இங்கு பிள்ளையாண்டான் அப்பா ஸ்தானத்தை
பெற முடியாது. "எல்லாம் எம்முடையது"
என உரிமை பாராட்டவும் முடியாது. காரணம் தம் அப்பா
வின் அனுபவம் பெறவில்லை.

அங்கு தனயன் வளர்ந்து பெரியவனாகி "எல்லா சக்
தியும்" பெற்றவனாகி, "பொறுப்புள்ளவ
னாகி" விட்டதால், தந்தையும், தனயனும்,
"சமம்" ஆகிவிட்டதால் இது விசிஷ்டாத்வைதம்.

இருவரும் ஒருவராக தோற்றிறுவும், பொறுப்புள்ள குழந்தை
ஆனதால், அப்பா ஆகிவிட்டான்.



"தந்தை" ஓய்வாக அமர்ந்தோ, அல்லது மறைந்தோ, தனயனுக்குள் "ஐக்கியமாகி" இங்கு இருவரும் "ஒன்றாகி" (ஒருவனாகி) எல்லாமே அவனாகி, விட்டதால், இது "அத்வைதம்" ஆகும்.

இங்கு "நாமரூபகுணம்" "கற்பிதமாக" கொடுக்கப்பட்டதேயன்றி, உண்மையில்லை. இங்கு தந்தை தனயன் இருவருமே, நாமரூப குண பேதமாக கற்பனை. அடுத்து தந்தை தனயன் இருவரும், ஆற்றலிலும், உரிமையிலும் "சமம்", ஆன கற்பனை. அடுத்து தந்தையும் தனயனும் நாமரூப பேதமற்ற நிலையில், "ஒன்றே" என ஆகி விட்ட கற்பனையே. இவை அனைத்தும் உவமையின் கற்பனையே!

ஆனால் துவைதமோ? விசிஷ்டாத்துவைதமோ? அத்வைதமோ?
இல்லவே இல்லை! எல்லாம் ஒன்றே!
அது சுகசொரூபமே! அதுயாமே!

பாபா.

அது நீங்களே! இது ஸத்யம்! இது ஸத்யம்!! இது ஸத்யம்!!!



## "அன்பின்" பெருக்கமும்!!! "பக்தியின்" உருக்கமும்!!!

ஓர் சமயம் ஸ்ரீ துகாராம் ஸ்வாமிகள், ஓர் சோளக் கொல்லையில், காவல் செய்து கொண்டிருந்தார். அக்கம் பக்க வயல்களிலும், சோளம் பயிரிட்டிருந்தார்கள் போலும்? எல்லா வயல்களிலும், சோளம் பருவ நிலையில் இருந்தது. நம் ஸ்ரீ ஸ்வாமிகள், பக்தியின் உருக்கத்தால், "விட்டல்! விட்டல்!" என, தன்னை மறந்து, தலைவனில் கலந்து, பரண் மேல் அமர்ந்த நிலையில், பஜனை செய்து கொண்டிருந்தார். இவர் பஜனையின் உருக்கத்தினையும், அன்பின் பெருக்கத்தினையும், பறவைகள் கூட்டம் கூட்டமாக வந்தன. வேறு அனைத்து சோளக் கொல்லைகளிலும், பறவைகள் அமராமல், கோடிக் கணக்கான பறவைகளும், நம் ஸ்ரீ ஸ்வாமிகள் காவல் செய்யும், கழனிக்கே (வயலுக்கே) வந்துவிட்டன. வந்த பறவைகள் அனைத்தும், சோளக் கதிர்களின் மேல் அமர்ந்தன. இப்போது அந்த வயலை காணும் போது, சோளப் பயிரோ, சோளக் கதிரோ, தெரியவில்லை எங்கும் எதிலும் பறவைகளே!



உ

இடை விடாத (இல்லாத) புறாக்களின் கூட்டம் தான். அவைகள் பார்வைக்கு வெகு ரம்யமாக இருந்தது.

ஆனால் விஷயம் என்னவென்றால்???

அப்படி அமர்ந்த அனைத்து புறாக்களும், "சோளமணிகள்!" கொத்துவதற்காக தம் தலையை தாழ்த்தும். ஸ்ரீஸ்வாமிகளின், விட்டல் நாமத்தில் லயிக்கும். "நாம" ஸ்மரணையினால், சோளமணியை கொத்த இயலவில்லை. "நாமமணிகள்!" உண்டு பசியாறின!

மாலையானதும், அனைத்து புறாக்களும், தம் கூடுகளுக்கு சென்று விடும். காலை சூரியோதயம் ஆனதும், அனைத்து புறாக்களும், சோளக் கொல்லைக்கு வந்து விடும். இப்படியாக ஒரு மாதம் ஆகியது. தோட்டக்காரன், சோளக் கொல்லையை, பார்வையிட வந்தான். அனைத்து தோட்டங்களிலும், ஒரு புறா கூட இல்லாமல், அனைத்தும் ஸ்ரீ ஸ்வாமிகள் காவல் செய்யும், தன் வயலில் இருப்பதைக் கண்டான். அறியாமையினால் நம் ஸ்ரீஸ்வாமிகளை, கண்டபடி திட்டினான். ஊராரிடம் நடந்த சம்பவத்தை சொல்லி, வருந்தினான். அவர்களும் ஆறுதல் பல சொல்லி, அறுவடை செய்து பார் என்றனர். மறுநாள் அறுவடை செய்து பார்த்தான். எம் ஸ்ரீ விட்டல் கருணையினால், அமோகமான பலனைக் கண்டான்.



உ

அவன் நம் ஸ்ரீ ஸ்வாமிகளிடம் மன்னிப்பு
கேட்டுவிட்டு, தனக்கு போக மீதி
அமோஹ விளைச்சலை, ஸ்ரீ ஸ்வாமிகள்
வீட்டிற்கே அனுப்பி விட்டான். மற்றும்
அந்த வயல்காரர்களும், ஸ்வாமிகள்
காவலிருவர், நாங்களும் பயன் பெற்றதால்,
நாங்களுக்கும் போக, அதிகபடியான விளைச்சலை,
ஸ்ரீ ஸ்வாமிகள் வீட்டிற்கே, அனுப்பி வைத்தனர்.
ஸ்ரீ ஸ்வாமிகளும் அந்த நாணயங்களையும், இல்லாத
எளியவர்களுக்கு, விநியோகம் செய்துவிட்டு, தம்
விட்டல் நாமாவையே, "பஜித்துக்" கொண்டும்
"படித்துக்" கொண்டும், ஆனந்தமாக இருந்தார்கள்.
ஸ்ரீ பகவன் நாமாவை பஜிப்பதால், உள்ளம் தூய்மையா
ஸ்ரீ பகவன் நாமாவை படிப்பதால், கனவு உபாதை
நீங்கும். (பசிப்பிணி நீங்கும்) இவ்விரு நிலைகளையும்,
பறவைகள் அனுபவித்தன என்றால், உங்கள் எங்கும்
உள்ளமும், கனவு உபாதை அகன்று, உள்ளம் தூய்மை
ஆனால், "அதுவே நாம்" "நாமே அது"
என்ற, ஸ்வய அனுபவம் பெற்று, ஜீவன் முக்தியும் பெறுவது
உறுதி என, ஆசி கூறி முடிக்கிறேன். பாபா.
எல்லாம் ஒன்றே! அதுவாமே! அது நீங்களே! இதுவே சத்யம்!



ஸத்தியம் பேசு.
தர்மம் செய்.
நாவை அடக்கு.
கருணையோடு இரு.

"ஸத்தியம் பேசினால், தர்மம் நிலை பெறும்"!

"ஸ்ரீ ஸத்குரு திருவடி துணை"!
"நம்பினோர் கெடுவதில்லை"!
"ஸ்ரீராம், ஜெயராம்";
"ஜெய ஜெய ராம்"; ஓம்!
"அஹம்பிரம்மம், ஜகம்பிரம்மம்;
"அகமே எல்லாம்"!
"ஜகம், பரமும், ஜீவர்களும்;
"சிறிதும் இல்லை"!
"எல்லாம் நீயே"! "எல்லாம் நன்மைக்கே"!



உ

கேள்வி:- விபத்தும் ஆபத்தும் ஒன்றா? வெவ்வேறா?

பதில்:- இரண்டும் வேறு வேறுதான்.

கேள்வி:- எமக்கு இவ்விரண்டும், ஒன்றாகவே தோற்றுகிறது. அப்படியானால், விபத்து என்றால் என்ன? ஆபத்து என்றால் என்ன?

பதில்:- நாம் அறியாமல் நடப்பது விபத்து என்றும்; நாம் அறியும் நிலையில் நடப்பது, ஆபத்து என்றும் சொல்லலாம்!

கேள்வி:- இவை இரண்டையும், வேறுவேறு நிலைகளில் சொல்வது என்றால், எப்படி சொல்லலாம்?

பதில்:- விபத்து என்பது விதிவழியென்றும்; ஆபத்து என்பது மதிவழியென்றும் சொல்லலாம்!

கேள்வி:- இவ்விதியும், அந்த மதியும், ஒன்றாக இணையுமா? அல்லது அவை இரண்டும், தனித்தனியே செயல்படுமா?

பதில்:- பெரும்பாலும், ஒன்றாகவே செயல்படுவதால்தான்; "விதியின் வழியே மதி செல்லும்"! என ஆன்றோர் சொல்லி வைத்தனர்.

கேள்வி:- அப்படியானால், "விதியை மதியால் வெல்லலாம்!" என அந்த ஆன்றோரே சொல்கிறார்களே, அதன் காரணம் என்ன?

பதில்:- இங்கு "விதிக்கும் விதியுண்டு" என வாக்கியமும் உண்டு.

கேள்வி:- அது என்ன? விதிக்கும் விதியுண்டு என்றால், விதியென்றாலே, விதிநாயகன் என்ற, இறைவனுக்கும். அந்த இறைவனுக்கும், இறைவனாக ஒருவன் இருக்கிறானா? இதை இப்பொழுதுதான் புதிதாக கேள்விப்படுகிறேன். இதை சற்று விளக்கியருள வேண்டும்?



உ

பதில்:— குழந்தாய்! இறைவனில் இருவர் இல்லவே இல்லைதான்; ஆனாலும் நீங் கண்டு செயல்படுவதால், அங்கு இறைவன் நாமம், சற்று மாறுபடும். ஆனால் இறைவன் ஒருவனே. இவைகளை சொல்லுமுன், சில விளக்கம் தருகிறோம். கவனமாகக் கேள்.

யாம் முன்பு சொன்னது போல், விபத்து நாம் அறியாமல் நடைபெறுவது என்றோம். அதாவது விபத்து விதிவழியென்றும், ஆபத்து மதிவழியென்றும், சொன்னோம். இதில் விபத்து என்றால், அது "திடீர் தாக்குதல்" போன்றதாகும். அதுவும் அந்தாவத்திற்கே, விதிக்கப்பட்ட ஒன்று, எதிர்பார்த்திராமல், திடீர் (அதுவும் திட்டமிட்டதே) என நிகழ்வதாகும். ஆனால் ஆபத்து அப்படியல்ல. இது செய்யலாகாது என்றோ, போகலாகாது என்றோ, அறிவுறுத்தியும், அதையும் மீறி, பலப்பரீட்சை செய்வது போன்றதாகும். இதை சபலம் எனச் சொல்லலாம். ஆனால் இதை இக்கலியுக மாந்தர்கள், அறியாமையினால், வீரச் சாகசம் என சொல்லிக் கொள்கிறார்கள். மேலும் காவல்துறைக்குட்பட்டதே அனைத்தும். இவை அனைத்தையும், பாரபட்ச தோஷமில்லாமல், அவனின் விதியின்படி, விகிதாச்சாரநியதியில் (கொடுக்கல், வாங்கல் நியதியில்) ஒழுங்காக நடத்துபவன், காவல்தனை கணிக்கும் காவலதேவன் என்ற இறைவனாகும். இந்த ஆபத்தானது திட்டமிட்டபடி நடப்பதாகும். இது மதியென்ற மனம் (புத்தி)



அஹங்கார அபிமானத்தால், வினைப் பெருக்கம்
செய்து கொள்கிறது. இங்கு அவ் வினையின்
தாபம், ஏற்று வந்த கர்மாவை மட்டும் முடிக்கும்.
மனதின் (புத்தியின்) எண்ண அழுத்தத்தால்
அடுத்த ஜன்மாவுக்கு, புதிய கர்மாவையும் சேர்க்கும்.
ஆனால் வியக்தானது, திடீர் என நிகழ் வதால், இச்சீவர்களின்
வினைக் கணக்கு முடிவுறும். இங்கு மரணத் தருவாயில், மனம்
சிதறுண்டு போவதால், அந்த எண்ண அழுத்தத்தினும்,
கர்மாவும் பெருகும். ஜனனமும் உண்டு.
இங்கு விதியின் வழியே மதிசெல்லும், என யாம் சொன்னது,
லௌகீகத்தில் என்னதான், திறமைசாலியாக இருந்தாலும்,
எத்தனை விழிப்புடையவனானாலும், சமயோசித புத்தி உள்ள
வனாக இருந்தாலும், அனைத்திலும் பராக்கிரமசாலியாக
இருந்தாலும், அந்த (ஒரு க்ஷண நேரம்) மதியென்ற புத்தியை
இழந்து விடுவான். இழந்தே ஆகவேண்டும். (இதுவே விதி!!!)
“இங்குதான் விதியின் வழியே மதிசெல்லும்!”
என்ற வாசகம் மெய்யாகி விடுகிறது. இங்கு பாரபட்ச
தோஷமின்மையால், விதியின் வழியே, கொடுப்பவனும்,
வாங்குபவனும், லாபநஷ்டமாகவும், இன்பதுன்பமாகவும்,



அவரவர் மனதால், பகிர்ந்து கொள்கிறார்களே
தவிர, பந்தப்பட்ட ஜீவனுக்கும், அதை
நடத்தும் விதிதேவனுக்கும், எந்த சம்பந்தமும்
இல்லையெனவாம். இங்கு பாதிப்படைவது,
மனமே.
அஹங்கார அபிமான எண்ணத்தால், வினைகளைப் பெருக்கிக்
கொள்ள, மாயாமனமே காரணமாக இருக்கிறது.
மன எண்ணத்தால், வினைப் பெருக்கமும், மன எண்ண மாற்றால்,
வினை நீக்கமும், இயல்பாக நடைபெறும்!
இங்கே விபத்தோ, ஆபத்தோ, வினையிருந்தால்,
மனதின் ஓவமாக, விதிதேவன் நடத்தி வைப்பான். என்பதே
ஸத்தியமாகும்.
மேலும் விபத்து என்பது, ஜீவர்கள் அறியாமல் நடப்பதால்,
விதி முடிந்த ஜீவர்களை மட்டுமே, பஸ்ஸிலோ, ரயிலிலோ,
விமானங்களிலோ, பேரழிவு உண்டாகும் இடங்களிலோ,
ஒட்டு மொத்தமாக கூடச் செய்வதும், விதிமுடியாத ஜீவர்களை,
தனியாக பிரித்து, அப்புறப்படுத்துவதும், கணக்குகளை
ஒழுங்காக முடிக்கும் திறன், விதிநாயகனுக்கு உண்டு!
மேலும் ஆபத்து என்பது, ஜீவர்களுக்கு வினையின்படி
நடைபெற இருக்கும், ஓர் கண்டம் என்றும், தத்து என்றும்,
(தத்த)



விதிக்கும் முடிவு என்றும், உலகப் பழமொழி
நிலையில், கரணம் தப்பினால் மரணம் என்றும்;
சொல்வதுண்டு. இதை மரணத்தின்,
அந்த நிலையென்றும், சொல்லலாம். இதில்
அவஸ்யம், விதி யென்ற மரணம் உண்டு என்றும், இதில்
தெய்வ பலத்தால் பிழைக்க வாய்ப்பு, உண்டென்றும்!
இதையே, விதியை மதியால் வெல்லலாம் என்றும்
சொல்வதுண்டு! இங்கோ விதிக்கும் விதியுண்டு;
என்ற வாசகம், ஸத்தியமாய் பொருந்தும்!
இங்கு ஆபத்து என்ற நிலையில், கண்டம் எனச் சொல்லும்
மரணம், இவ்விதத்திலும் ஆச்சரியமில்லை!
இதில் தெய்வ பலத்தால், இந்த ஆபத்து என்ற கண்டம்,
நிவர்த்திக்கவும் படலாம்.
விதிக்கும் விதி யென்பது; வினையால் வகுக்கப்பட்ட
விதியானது, விதி தேவனால் (காலதேவனால்) நடந்தேறும்.
ஆனால் இச் ஜீவன், அந்த இறைவனின் கருணையைப் பெற்று
விட்டால், அங்கு அவ் விதி, சற்று மாற்றி அமைக்கப்படும்!
மாற்றி அமைக்கலாமே தவிர, விலக்க முடியவே முடியாது.
கேள்வி:- ஐயா! ஸ்ரீ மார்க்கண்டேயர், ஸ்ரீ சாவித்திரியின்
கணவன், ஸத்தியவான் போன்றவர்கள், விதியை வென்ற நிலை
இருந்தாரே?



பதில்:- ஆமாம் குழந்தாய்! இதைப் போல ஆயிரக் கணக்கானோர், உபாசனையின் பலத்தாலும், ஸ்ரீமஹான்களின் ஆசியின் பலத்தாலும், விதிக்கப்பட்ட விதியை வென்றிருக்கிறார்கள் என்பதைவிட, விதியென்ற தாவத்தை மாற்றிப் போட்டுக் கொண்டார்கள் என்று நான் சொல்ல வேண்டும்.

கேள்வி:- அப்படியானால், அப்படி மாற்றும் போது, எதனால் எதன் விதி முடிக்கப்படுகிறதோ, அதனால் தான் அவ்விதி முடிவு நடைபெறுமா? வேறு மாற்றத்தில் நடைபெறுமா?

பதில்:- அவ்விதியின் முடிவானது, எந்த நாமரூபத்தில் அவ்விதி முடிக்க வேண்டுமோ, அதே விதியானது, அதே நாமரூபத்தில், வேறு நிலையில், நடந்து முடிக்கும். உதாரணமாக, வாகனத்தால் அடிபட்டு, மரணமெய்த வேண்டிய ஒருவன், அதே வாகனமென்னும், இரும்பினால் அடிபட்டோ, அதே வாகனமென்னும், மரத்தால் அடிபட்டோ, காலதாமதத்தையும் ஏற்படுத்திக் கொண்டு, விதி முடியும். காரணம், தோற்றம், இருப்பு, மாற்றம், மறைவு இவை நான்கும், ஏக சொரூபமாக இருப்பதால், தோற்றம் ஒன்றே! ஆனால் மாற்றம், வேறு வேறாகவும், இருக்கலாம்.

கேள்வி:- விதியை மதியால் வெல்லலாம் என்ற, கருத்தை சற்று விளக்கம் தந்தால் நல்லது. விதியென்றது கால தேவன் என்ற இறைவன். மதி என்றது மனம் என்ற புத்தியாகும். இந்த புத்தியால், இறைவனை வெல்வது என்பது, சற்று புரியாத புதிராக தோன்றுகிறது. ஆகவே இங்கு,



உ

மனம் என்ற புத்தியானது, இறையாற்றலை எப்படி வெல்ல முடியும்? மேலும் விபத்து என்பது, திடீர் தாக்குதலாக இருக்கும் போது, இங்கு மனம் எப்படி அதை சமாளிக்க முடியும்? இதை சற்று விளக்க முடன் சொல்ல வேணுமென்று வேண்டுகிறேன்?

பதில்:— குழந்தாய்! விபத்து என்பது விதிசம்பந்தம் கொண்டதாகும். அந்த விதியும், வினையில்லாமல், நடந்த முடியாது. ஆகவே இங்கு, வினை உண்டானால், விதி உண்டு. விதி உண்டானால் விபத்தும் உண்டு, என பொருள் கொள்ள வேண்டும். இந்த விபத்தும், ஓர் திட்டமிட்ட காரியமாகும். இங்கிந்த விபத்துக் குள்ளாகும் ஜீவன், இறை நம்பிக்கையில் பரிபூரண சரணாகதி பண்ணியவனாக இருக்கும் போது, அந்த சரணாகதியில் ஏற்படுவது மனம் என்ற மதியாகும். வினையின்படி, நடைபெற வேண்டிய, சோதனையையும் அதைச் சார்ந்த வேதனையையும், கருணையே வடிவான இறைவன் சற்று ஒதுக்கவோ, சற்று தாமதப்படுத்தவோ, அல்லது அதே விபத்தை நாமரூபத்தை அனுகூலம் பண்ணி அதிகம் வருத்தாமல், வலிமையை குறைக்கவோ அவனால் முடியும். ஆகவே இங்கு வினையென்றால் விதியென்றும், மதியென்றால் இறைவன் கருணையென்றும் கொள்ளலாம்.



இங்கு மரணம் மூன்றாகப் பிரிக்கப்படுகிறது.
1. ஒன்று விதிவழி, இயல்பான மரணம் என்றும்,
2. மற்றொன்று விதிவழி, துர்மரணம் என்றும்,
3. மூன்றாவதாக விதிவழி, நாம் தேடும் மரணம் என்றும்,
சொல்லலாம்! (சிலேட்டுமம்)

1. இயல்பான மரணம் என்றால், வாதம், பித்தம், சளி அடைப்பு என்றும், மற்றும் இக்கலியில், உடல் சம்பந்த நோயிலிருந்தும், வயோதிக நியதியிலும், நடைபெறுவதாகும்.

2. துர்மரணம் என்றால், விபத்தினால் நடைபெறும், அனைத்தும், மற்றும் தற்கொலை நிகழ்ச்சிகள், அனைத்தும் துர்மரணமாகும்!

3. நாம் தேடும் மரணம் என்றால், ஆபத்தினால் வருவதாகும். இதை நாமே பலப்பரீட்சையினால், அஹங்காரத்தால் நாமாக தேடும் ஓர், அபாக்கிய மரணமாகும்.

விபத்தோ, ஆபத்தோ, இயல்பானதோ, இவை அனைத்தும், திட்டமிட்டபடி, நாம் தேடிய கர்மாவின்படி நிகழக்கூடியதாகும். இங்குதான், நாம் கொடுத்ததை, வாங்க வேண்டுமென்றும், நாம் வாங்கியதை, கொடுக்க வேண்டுமென்றும், நாம் விதைத்ததை, நாம் தான் உண்ண வேண்டுமென்றும், அனைத்து வாசகமும், பொருந்தும்.

ஆனால் ???

தற்கொலை எனச் சொல்லும், ஒன்று மட்டும், விதிக்கு அப்பாற்பட்டதாகும்! இதற்கு மனோவிரக்தியே (வெறுப்பே) காரணமாகும்.

இப்படி தற்கொலையின் நிமித்தம், நாமே மரணத்தை, தேடிக் கொள்ளும் ஜீவன்! உதாரணமாக அவன் விதி எழுத்தில் (70)



வெறும்பனைப் முடியாதாக இருந்து, நாற்பதிலேயே (40) தற்கொலை கொண்டானையின், இன்னும் முப்பது (30) வருஷம், அவன் வாழவேண்டிய பிராப்தி இருப்பதால், இங்ஙான் தண்டனை என்றநியதியில்: "30X360=10,800" வருஷங்கள், வேறுதாவம் பெறமுடியாமல், அன்ன பானம் கிடைக்காமலும், வாயு வடிவில் சூட்சும சரீரியாய், சஞ்சாரம் செய்து மஹா அவஸ்தைப்பட வேண்டிவருமென, மார்க்கண்டேய புராணம் சொல்கிறது!

ஆகவே பக்குவ ஆன்மாவோ, அபக்குவ ஆன்மாவோ, தற்கொலை ஒன்றை மட்டும் தவிர்க்கவும். இது ஸபுத்தமல்ல! ஆயுக்தமல்ல! இயல்பானதுமல்ல!

மேலும் ஸ்ரீ மார்க்கண்டேயர், மரணத்தை வென்றது இறை பக்தியில், முழுமையான சரணாகதியாகும். இங்கு விதிமாறி அமைகிறது!

சாவித்திரி தன் ஸ்ரீ பதியான, சத்தியவானை காப்பாற்றி மரணத்திலிருந்து மீட்டது, ஸ்ரீ பதிபக்தியும் ஸ்ரீ பாகவத தர்மமும், இணைந்ததாகும்! இங்கு விதி காலதாமதமானது. அதைப்போல ஸ்ரீ பக்தர்கள், ஸ்ரீ பாகவதோத்தமர்கள், மற்றும் ஸ்ரீமஹான்களிடம், பக்தியிலும், யோகத்திலும் வழி



மாற்றி அமைக்கப்படுகிறது. ஆனால்?

விதி அழிக்கப்படுவதில்லை ஆனால்?

ஆத்ம ஞானி ஒருவனிடமே, விதி என்ற
சொல்லுக்கு இடமே இல்லை

விபத்தோ ஆபத்தோ ஓர் ஞானியிடம் மறைவதும் இல்லை! மாறுவதும் இல்லை!

ஓர் ஞானி அவைகள் தலைவணங்கி பணிந்து ஏற்றுக் கொள்வதால்,

விதியும், விதி நாயகனும் (இறைவனும்) அதன் காவலர்களும்,

# “அவனுள் அடங்கி”!

அவையே அவனாகி, அவனே அதுவாகி, அதுவே நாமாகி,

கலக்கம், சந்தேகம், பயம், துக்கமற்ற சலனமும் அற்ற,
பிரம்மானந்த சொரூபமாகிய, “அது” ஆகிவிடுகிறான்.

விபத்து ஆபத்தின் பொதுவான கருத்து!

முதல் பக்கத்தில் யாம் சொல்லிய நிலையில், இறைவன் ஒருவனே!
விபத்தோ, ஆபத்தோ, இயல்பானதோ, இவை அனைத்தும், அவரவர்
வினையின்படி, ஒழுங்காக பாரபட்ச தோஷமில்லாமல்,
கணக்கை முடிப்பவன், காலத்தை கணிக்கும் “காலதேவன்”
என்பவன் ஒருவனே!
பக்தியின் நிலையில், முழுமையாக தம்மை சர்வார்ப்பணமாக
விட்டுவிட்டு, நிர்க்கதியாக, இறைவனை நம்பி தான் இருந்தவன் எவனோ,



உ

"அகங்கார, அபிமானங்கள்" துறந்தவன் எவனோ?
அவனை ரக்ஷிக்கும் நிமித்தம், அதே இறைவன், கருணையே வடிவாகி, "ஆபத்பாந்தவனாக!" ஓர் நாமரூப வடிவம் தாங்கி வந்து, காலத்தை சற்று, அப்பக்தன் நிலைக்கு மாற்றி அமைக்கும் இறைவனாகும்.

இங்கு இறைவன் "ஒருவனே" (அவனே) காலதேவன்! ஆபத்பாந்தவன்!!

விபத்து என்றது, விதிவழி என்றால், அது நம் வினையின் படி, நடப்பதாகும்!

ஆபத்து என்றது மதிவழி என்றால், நம் மனோசபலத்தால், பலப்பரீட்சையின் நிமித்தம் நம் "மதி"யினால் (புத்தியினால்) நாமே நம் கர்மாவை, வலிய ஏற்கிறோம் என்பதாகும்! ஆனால் இவ்விரண்டும், விதியின் வழியே நடைபெற்றாலும், முந்தையது "கடுமை!" என்றும், பிந்தையது "கொடுமை!" என்றும் சொல்லலாம்.

இங்கு???

எம் ஆத்மானந்தக் குழந்தைகளே! ஸ்ரீ ஸத்குருவாக்கிய சிரத்தையில் முழு நம்பிக்கையோடு இருக்கும், எம் குழந்தைகள் அனைவரும் "காலத்தை" வென்றவர்களாகும்! காலாந்த மானவர்களாகும்! இது பிரமாண உண்மை! உங்கள் அனைவருக்கும் கடுமையும் கொடுமையும் இல்லவே இல்லை!

பாபா.




Adobe of Love

You are Everything!